
# நகரத்தார் பாரம்பரியமும் திருமண முறைகளும்







சொ. காந்திமதிநாதன்





# நகரத்தார் பாரம்பரியமும் திருமண முறைகளும்

தொகுத்தவர்
**சொ. காந்திமதிநாதன்**

**வெள்ளி விழா வெளியீடு – 26.01.2011**

**நகரத்தார் மன்றம் திருவான்மியூர்**
47C/54, கிழக்கு மாடவீதி,
திருவான்மியூர், சென்னை – 600 041.

நகரத்தார் மன்றம் திருவான்மியூர், சென்னை – 600 041.

**நகரத்தார் பாரம்பரியமும் திருமண முறைகளும்**

**ஜனவரி 2011**

ஒளி அச்சுக்கோர்வை:

**SRINIVASAA GRAPHICS**

New # 12, Valmiki Street, ECR,

Thiruvanmiyur, Chennai - 600 041.

Cell : 98415 99716, 98419 59090

அச்சிட்டோர் :

**MARUNDEESWRA ART PRINTERS**

No. 308, II Main Road,

Nehru Nagar, Kottivakkam,

Chennai - 600 096.

Phone : 65177602, Cell : 98403 34574

வெளியீடு:

**நகரத்தார் மன்றம் திருவான்மியூர்**

47-C/54, கிழக்கு மாடவீதி,

திருவான்மியூர், சென்னை – **600 041.**

## நகரத்தார் பாரம்பரியமும், திருமண முறைகளும்

ஒரு புத்தகத்தை வெளியிடுவதற்கு முன் அதற்கென்று ஒரு தேவை இருக்க வேண்டும். இந்தப் புத்தகத்திற்கும் அப்படி ஒரு தேவை இருக்கிறது.

நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே நம் இனத்தவர்கள் பர்மா, ரங்கூன், சிங்கப்பூர், மலேசியா, இலங்கை எனத் தொழில் நிமித்தமாக அயல்நாடுகளுக்குப் பயணிக்கத் தொடங்கினர். அன்றிலிருந்து இன்று வரை அந்தப் பயணம் தொடர்ந்து கொண்டேதான் இருக்கிறது. ஒரே வித்தியாசம்... பர்மா, ரங்கூன், இலங்கைக்குப் பதிலாக அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து நாடுகள்.. அவ்வளவுதான்.

ஒரு தலைமுறை அயல்நாட்டில் குடியேறுகிறபோது, அவரவரது அடுத்த தலைமுறைக்கு நம் இனத்தின் பாரம்பரியமும், அருமையும் தெரியாமல் போய்விடுகிறது. பிள்ளையார் நோன்பு, மகர் நோன்பு போன்ற நமக்கே உரித்தான பண்டிகைகள், விழாக்கள், காரணப்பெயர்கள், வழக்குச் சொற்கள் போன்றவற்றை மறந்து போய் விடுகின்றனர். இது அயல்நாட்டு வாழ் நகரத்தார்களுக்கு மட்டுமல்ல... நம்மூர் இளைஞர்களுக்கும் பொருந்தும்.

இதுபோன்ற தகவல்கள் அனைத்தையும் இளைய தலைமுறையினருக்குக் கொண்டு சேர்க்கவும், அயல்நாட்டில் வசிக்கும் புதிய தலைமுறையினருக்கு எடுத்துச் சொல்லவும் இந்த நூலை நாம் தொகுத்துள்ளோம்.

திருமண முறைகள் என்று எடுத்துக் கொண்டால்கூட, அதில் இருக்கக்கூடிய சடங்குகள், அவற்றை செய்யும் முறைகள், அவற்றுக்கான காரணங்கள் என சகலமும் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளது.

பல முத்துக்களை ஒன்றாகக் கோர்த்து மாலை தயாரிப்பதுபோல, பல தகவல்களை ஒன்றாக்கி இந்த நூலை நாம் உருவாக்கியுள்ளோம். உங்கள் இளைய தலைமுறையினருக்கு படிக்கக் கொடுங்கள்.... நம் இனத்தின் மீதான அருமை அவர்களுக்கு நிச்சயம் புரியும்.

அன்புடன்

**சொ. காந்திமதிநாதன்**
நூல் தொகுப்பாளர்

# பொருளடக்கம்


1. தாலாட்டு
2. குலதெய்வங்கள்
3. நகரத்தாரின் மரபுச் சொற்கள்
4. பட்டப் பெயர்கள்
5. உபதேசம் கேட்டல்
6. குடும்ப சிறப்பு நிகழ்ச்சிகள்
7. கேள்வி பதில்
8. திருமண நடைமுறை விளக்கம்
9. வேலங்குடிப் பட்டயம்


# தாலாட்டு

நகரத்தார்களின் பாரம்பரியத்தை எடுத்துக் காட்டுவதில் முதலிடம் வகிப்பது செட்டிநாட்டுத் தாலாட்டுக்கள். எழுதாத இலக்கியமான தாலாட்டுப்பாடல்கள், நகரத்தார்களின் குறிப்பாக, ஐயாக்களின் குழந்தை பிறந்த பரம்பரையின் பெருமையைப் பறைசாற்றுவனவாக அமையும். அவரவர் குலப்பெருமை மட்டுமல்லாது, தத்தம் மனக்கிடக்கைகளையும் வெளிப்படுத்துவார்கள். வட்டார வழக்குகளும், வார்த்தைக் கோர்வைகளும், மனதை மயக்கும் சொல் அலங்காரமும் அதில் விரவிஇருக்கும். அப்படிப்பட்ட தாலாட்டுப் பாடல்களை, இன்றைய நாகரிகம் காரணமாக, வேகமான வாழ்க்கை காரணமாக, விஞ்ஞானத்தின் வளர்ச்சி காரணமாக, கேட்கவே இயலவில்லை, திரைப்படங்களில் தவிர. நம்முடைய இன்றைய இளைய சமுதாயத்தினருக்கும், வருங்காலத்தில் நம் வழித்தோன்றல்களுக்கும் பயன்படும் வகையில், பலரால் பல சமயங்களில் தொகுக்கப்பட்ட தாலாட்டுப் பாடல்களில் சிலவற்றை – சிலவற்றின் சில பகுதிகளைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்திருக்கிறோம். படித்து, பாடிப் பயன் பெறுக. இந்தப் பாடல்களைத் திரட்டி, ஆராய்ந்து, புத்தகவடிவில் தந்த திருமதி, சு. நாகம்மை அவர்களுக்கு நன்றி.

## செட்டிநாட்டுத் தாலாட்டுப்பாடல்கள்

வையை பெருகிவர
வாந்த மணல் ஊந்துவர
ஊறிவந்த தண்ணியிலே
ஒட்டிவந்த கட்டிமுத்தோ
பெருகிவந்த தண்ணியிலே
பின்னணைந்த சந்தனமோ
சந்தனமோ என்பொருளோ
சாமி தந்த தவப்பயனோ
கொட்டி வைத்த முத்தோ
குமிச்சு வைச்ச ரத்தினமோ
கட்டிக் கரும்போ
காணிக்கை ஆனிமுத்தோ
முத்தில் ஒரு முத்தோ
முதிர விளைந்த முத்தோ
தேற விளைந்த முத்தோ
தில்லைக்குகந்த முத்தோ
பாண்டிப் பெருமுத்தோ
பாட்டன்மார் ஆண்டமுத்தோ
ஆனிப் பெருமுத்தோ
ஐயாக்கள் ஆண்டமுத்தோ
முத்துமுத்து ஆத்துக்குள்ளே
மூணாத்துப் பாய்ச்சலிலே
முக்குளிச்சு முத்தெடுக்கும்
முத்துமகன் நித்திரையோ
நித்திரையும் போவானாம்
சித்திரைப்பூத் தொட்டிலிலே
தாமரையும் பூக்குமாம்
தனக்கிசைந்த பொய்கையிலே
தாமரையின் வாழ்மலரோ
தங்கை பெற்ற குஞ்சலரோ



ஏனழுதான் என்னறியான்
இட்டகண்ணும் மைகரைய
கரும்புக்கழுதானோ கண்ணிலிட்ட மைகரைய
பாலுக்கழுதானோ பவழக் கனிவாய் நோக
தேனுக்கழுதானோ சிரிச்ச கனிவாய் நோக
அடியார்க்கினியானோ ஆசைபதம்உள்ளவனோ
சிறியா மனத்தாபம் தீர்க்கவுன்னு வந்தானோ.

**தெய்வானை ஆச்சி ,காரைக்குடி.**

கையிலாசம் தேடி காராம் பசுவழைச்சு
கொண்டு வந்த பாற்பசுவுக்கு
கொம்பெல்லாம் பொன்னெறமாம்
வாங்கி வந்த பாற்பசுக்கு
மடியெல்லாம் தங்க நெறம்
போட்டுக் கறக்க பொன்னாலே முக்காலி
அணைஞ்சு கறக்க அணைகவுரும் பொன்னாலே
தென்கடலி மாணிக்கம் தெரட்டி அடுப்பேத்தி
வடகடலி மாணிக்கம் வாரி உமிபரப்பி
நாலூறு நற்பகழும் நடுவே தணல் வளர்த்து
நல்லாக் காய்ச்சிய நற்பசும்பாலை
மானத்தைப் பார்த்து வளரும் பொறைபார்த்து
கோவத்தை ஆத்தி குடியுமின்னா பாலமிர்தம்.

வாழை இலைபரப்பி
வந்தாரைக் கையமர்த்தி
தென்னை இலைபரப்பி
சென்றாரைக் கையமர்த்தி
தெருமறிந்து அன்னமிடும்
தெசகரனார் பேரனோ
வழிமறித்து அன்னமிடும்
மகராசனார் பேரனோ

**சி.டி.வள்ளியம்மை ஆச்சி, காரைக்குடி**

தெக்கே மழைபொழிய மீனாட்சியம்மை
செங்கைக்கே தீத்தம் வர
சேங்கை மணல் ஒதுக்கி
தென்னை பின்னை வைப்போமா
தென்னை குலைநெருங்கி
செண்பகப்பூத் தாழ்மலர்ந்து
தென்னை வந்து வீசாதோ
செல்ல மகன் நித்திரைக்கு
வடக்கே மழைபொழிய மீனாட்சியம்மை
வையைக்கோ தீத்தம் வர
வையை மணல் ஒதுக்கி
வாழை வைப்போம் தென்னை வைப்போம்
வாழை குலைநெருங்கி
வாழை வந்து வீசாதோ – எங்க
வாழுமகன் நித்திரைக்கு.

**மு.சிகப்பி ஆச்சி, பள்ளத்தூர்**

ராராட்ட தூணசைய
ராமர் கை அம்பசைய
வில்லை விசையேற்றி
விட்டெறிந்தார் காதவழி
ஓடி எடுப்பாளோ
ஒருகால் சிலம்புதிர
திரும்பி எடுப்பாளோ
திருக்கால் சிலம்புதிர.

ஆளப் பொறந்தானுக்கு யாரு துணையிருப்பா
சாமந்து ணையிருக்கும் சந்திரரும் சூரியரும்
கூடத்து ணையிருப்பாள் கொத்தவனாள்ஈசுவரியும்
ஒக்கத்து ணையிருப்பாள் உமையவளும், பார்வதியும்

ஆறிரண்டு காவேரி
அதன் நடுவே சீரங்கம்
சீரங்கம் நேர் கிழக்கே
திருவானைக்காவலிலே
ஜம்புலிங்க நாதரும்



ஊற்றிலே வீற்றிருக்கார்
உதிர்ந்த பழம் திங்கவுன்னு
அகிலாண்ட ஈசுவரியும்
ஓடிப்போய் வீற்றிருக்காள்
கனிந்த பழம் திங்கவுன்னு
காற்றிலே வீற்றிருக்காள்.

வெள்ளிக் கடலாசி
வெங்கல மைக்கூடு
பேனா புடித்தெழுதும்
பெரிய குலவம்சமோ
எங்கள் குலம் மங்காமல்
இருக்க வேணுமின்னு
தங்கமணி பொங்க
தானாள வந்த கண்ணோ.

**ஏ. உமையாள், கோனாபட்டு**

ராராட்ட தூணசைய
ராமர் கையம்பசைய
வெள்ளி ரதமசைய
வீமர் கை அம்பசைய
நாடசைய வார்த்தை சொல்லும்
ராஜாக்கள் உங்களய்யா
காடசைய வார்த்தை சொல்லும்
கருணவார் உங்களய்யா
வீடசைய வார்த்தை சொல்லும்
வீமவார் உங்களய்யா.

அழுதால் அரும்புதிரும்
அண்ணாந்தால் பொன்சிதறும்
சிரித்தால் முத்துதிரும்
செல்லமகன் வாய் திறந்தால்
தேன் சிதறும்
தேனோ திரவியமோ
தெவிட்டாத மாங்கனியோ.

**மா.நாகம்மை ஆச்சி, கோனாபட்டு**

ராரிக்கோ ராரிமுத்தோ
ராமருக்குப் பஞ்சு மெத்தை
பஞ்சுமெத்தை மேலிருந்து ராமர்
பஞ்சாங்கம் பார்க்கையிலே
வயசு நூறென்று சொல்லி
வாசிச்சார் பஞ்சாங்கம்
எழுத்து நூறென்று சொல்லி
எழுதினார் பஞ்சாங்கம்.

**மீனாட்சி இராமனாதன், காரைக்குடி**

ராராட்டத் தூணசைய
ராமர் கை அம்பசைய
அம்பு முழுதசைய ஆளப் பொறந்தாயோ?
வில்லு முருகசைய விளங்கப் பொறந்தாயோ?
காடுவெட்டி நாடாக்கி
கள்ளரெல்லாம் உள்ளமர்த்தி
நாடுபெற்று வருவார்கள்
ராஜாவோ உங்களய்யா?
வெற்றி பெற்று வருவார்கள்
வீமரோ உங்களய்யா.

சங்கரா உன் காவல்
சாத்தய்யா உன் அடிமை
வீரப்பா உன் காவல்
வேறு வினை வாராமல்
சொக்கலிங்கம் உன் காவல்
சொப்பனங்கள் தட்டாமல்
கருப்பைய்யா உன் காவல்
என்னய்யாவுக்கு கண்ணேறு வாராமல்
கண்டுணறு வந்தால்?
வெண்ணீறு இடுங்கள்
விளக்கெடுங்கள் திட்டிசுத்த
சுண்ணாம்பும் மஞ்சளுமாய்
என் ஐயாவுக்குச் சுற்றுங்கள்.

**கண்ணாத்தா ஆச்சி, நாட்டரசன் கோட்டை**



ஏனழுதான் என்னரியான்
ஏலம்பூ வாய் நோக
கரும்புக் கழுதானோ
கண்ணிலிட்ட மை கரைய
சிலம்புக் கழுதானோ
செங்கமல வாய் சிவக்க
மண்ணிலொரு புன்னை மரம்
வருசமொரு பூப்பூக்கும்
வருந்திஒரு காய் காய்க்கும்

ஆராயிரவர்க்கும்
அறியவந்த பார்ப்பாருக்கும்
காரியமும் சொல்லி
கணக்குரைப்பார் பேரனோ!
காடுவெட்டி நாடாக்கி
கற்களெல்லாம் உள்ளழுத்தி
நாடுபெற்று வாரார்கள்
ராசமுடி ஐயாக்கள்
சீமைப் பெற்று வாரார்கள்
செல்லமுடி அம்மான்மார்
அம்மானார் எல்லையிலே
என்ன வைத்தால் தோப்பாகும்?
வைத்த பயிர் வளரும்
வாழை வைத்தால் தோப்பாகும்
சேர்த்த பயிர் வளரும்
தென்னை வைத்தால் தோப்பாகும்
தொட்ட இடம் துலங்கும்
தோட்டம் பயிராகும்
தென்னையும் வாழையும்
சேர்த்து வைத்தால் தோப்பாகும்
வாழையும் தென்னையும்
வாங்கி வைத்தால் தோப்பாகும்
இஞ்சி பயிராகும்
எலுமிச்சை தோப்பாகும்
மஞ்சள் பயிராகும்
மாதுளையும் தோப்பாகும்

கொத்திஞ்சிக் காய்க்கும்
கொடிமிளகு பிஞ்சு விடும்
ஏலக்காய் காய்க்கும்
எழுனூறு பிஞ்சு விடும்
சாதிக்காய் காய்க்கும்
தாய்மாமன் எல்லையிலே.

**தமிழண்ணல்**

பாசி படர்ந்த மலை – என் கண்ணே
பங்குனித்தேர் ஒடும் மலை
ஊசி படர்ந்த மலை – என் கண்ணே
உத்திராட்சம் காய்க்கும் மலை
ஆதி சிவனும் அங்கிருக்கும்
தேவாதியும் கூடிமுனைந்து
குழந்தை வரம் தந்தாரோ?

கண்ணோ கமலப்பூ – என் கண்ணே
கையிரண்டும் தாமரைப்பூ
மேனி மகிழம்பூ – என் கண்ணே
மெல்லி நல்லாள் சிற்றடியாள்
சிற்றடியாள் நானுனக்கு
செய்த தவம் நீகேளு

முற்றம் மெழுகி – என் கண்ணே
முழுச்சிவப்பாய்க் கோலமிட்டு
பச்சை பரப்பி – என் கண்ணே
பகவானைத் தெண்டனிட்டுப்
பாலாடைக்குப் பால் கொடுத்து – என் கண்ணே
பசித்தோர் முகம் பார்த்து
எட்டாத கோயிலுக்கு என் கண்ணே
எட்டி விளக்கேற்றி
தூ ரத்துக் கோயிலுக்கு – என் கண்ணே
தூ ண்டா விளக்கேற்றி – நான்
திங்கள் முழுகி – என் கண்ணே
திருத்தணிக்குப் போகையிலே
திருத்தணி முருகர் – என் கண்ணே



திருவுளத்தில் கொண்டாரோ
மாமயில் முருகரும் என் கண்ணே
மனமகிழ்ந்து கொண்டாரோ
மாதம் முழுகி – என் கண்ணே
மதுரைக்குப் போகையிலே
மதுரை நகர் சொக்கலிங்கம் – என் கண்ணே
மனமகிழ்ந்து கொண்ட – என் கண்ணே
மாதேவர்கள் எல்லோரும்
திருநீறு தந்தால் என் கண்ணே
செலவழிந்து போகுமென்று
திருக்காது குண்டலத்தை – என் கண்ணே
சிறப்பாகத் தந்தாரோ
மாலை கொடுத்தால் – என் கண்ணே
மலர்வாடிப் போகுமென்று
மாங்கனியைக் கைகொடுத்து– எனக்கு
மைந்தன் கலி தீர்த்தாரோ.

**ஆறு. அழகப்பன்**

ஆராரோ ஆரிரரோ
ஆரிரரோ ஆராரோ
ஆரடித்து நீ அழுதாய்
அஞ்சனக்கண் மைகரைய
சீரெடுத்த செல்வமிகு
சீமான் திருக்குமரா
பாலில் விருப்போ
பணியாரம் வேண்டி னையோ
சோலைப் பசுங்கிளியே – என்
சுந்தரமே சொல்லியழு
சப்பாணி கொட்டித்
தளர்ந்தனையோ அல்லது உன்
கைப் பாவைக்காக
கலங்கி அழுதனையோ?

வெள்ளி எழுத்தாணி
வெண்கலத்தால் மைக்கூடு
தொட்டுக் கணக்கெழுதும்
துரைராஜா பேரனோ?
ஏறுவதும் கப்பல்
இறங்குவதும் துறைமுகம்
படிப்பதும் தமிழ்
பார்ப்பதுவும் பணக் கணக்கு,

**ஆறு. அழகப்பன்**

தங்கத்தால் இட்டுவட்டி
சாதமிட வெள்ளிவட்டி
வெள்ளியினால் இட்டுவட்டி
விதத்தில் ஒரு தொட்டிகட்ட
பட்டெடுங்கள் தொட்டிகட்ட
பவுன் உரையுங்கள் பொட்டுமிட
பொழுதுறங்கப் பாய் விரித்து
பஞ்சாச்சரம் போல
பட்டு மெத்தையுமே விரித்து
பாருங்கடி தாதிகளா
படுத்துறங்கும் பாவினையை
ஆட்டுங்கள் அன்ன ஊஞ்சல்
அழுகை அமருமட்டும்
ஊட்டுங்கள் பாலமிர்தம்
உறக்கம் தெளியுமட்டும்.

கண்ணுமணி பொன்னுமணி
கந்தருட வேலுமணி
வேலுமணி வேண்டுமென்று
வெகுநாளாய்த் தவமிருந்தோம்
சின்னமணி பொன்னுமணி
சிவனுடைய வேலுமணி – இந்த
சிவமணி வேண்டுமென்று



சிலநாளாய்த் தவமிருந்தோம்
மாங்கனியோ தேங்கனியோ
மதுரைப் பலாச்சுளையோ
தேங்கனி வேண்டுமென்று
தேடித் தவமிருந்தோம்

**ஆறு.அழகப்பன்**

அரசே உனைவேண்டி
ஆடாத தீர்த்தமில்லை
பொருளே உனைவேண்டிப்
போகாத கோயிலில்லை
மாமாங்கம் ஆடி
மதுரைக் கடலாடி
சீரங்கம் ஆடி
திருப்பாற் கடலாடி
வற்றாத பொய்கையிலே
வந்துதித்த செல்வமே – நீ
கற்கண்டு சர்க்கரையோ
கணுவில்லாச் செங்கரும்போ
சர்க்கரையோ கற்கண்டோ
சாதிப் பலாக்கனியோ
பூசைக் குடமோ
பொய்சொல்லா வாசகமோ
ஆசைக் கிளியோ
அசைந்தாடும் பம்பரமோ
சோலைப் பசுங்கிளியோ
சொல்பெரிய வாசகமோ
சொர்ணப்பொன் தொட்டிலிலே – சோதி
சிகாமணியே கண்வளராய்.

**ஆறு. அழகப்பன் (தொ.ஆ)**
தாலாட்டுக்கள் ஐநூறு, சென்னை
பாரி நிலையம்,**1972.**

ஸ்ரீரங்கம் ஆடி
திருப்பாக் கடலாடி
மாமாங்கம் ஆடி
மதுரைக் கடலாடி
சங்குமுக மாடி
சாயாவனம் பார்த்து
முக்குளமும் ஆடி
முக்தி பெற்று வந்த கண்ணே

வெள்ளிவளை பூட்டி
விலாசமாய்த் தொட்டிகட்டி
தங்கவளை பூட்டி
சதுர அலங்காய் தொட்டி கட்டி
பச்சை இலுப்பை வெட்டி
பால் வடியத் தொட்டி கட்டி
தொட்டியிலே அட்டணக்கால் போட்டுத்
தூங்கறது ஆரு மகன்
சீதை மகனோ ஸ்ரீராமர் தந்த கண்ணோ
அல்லி மகனோ அரிராமர் மருமகனோ.

மானுடா ஒடுது
மறியிடா நல்லதம்பி
மானோடும் வீதி எல்லாம்
தானோடித் திரிந்தானோ
ஒடித் திரிந்தானாம்
ஒரு கால் சிலம்புதிர
தேடித் திரிந்தானாம்
திருக்கால் சிலம்புதிர.

ஆனை கட்டிப் போரடிக்கும் அம்மானார் சேனைதலம்
குதிரைகட்டிப் போரடிக்கும் கோடிப்பேர் சேனைதலம்
மான்கட்டிப் போரடிக்கும் மாமுடியார் சேனைதலம்



அம்மானார் செய்களிலே அவலுக்கொரு நெல்லெடுத்து
பள்ளிதனை கூட்டிப் பதம்போல் அவல் இடித்து
இடைச்சிதனைக் கூட்டி இலைபோல் அவல் இடித்து
அவல் அழகை கண்ட தம்பி – நீ அமுகை அமர்ந்தாயோ.

காடு வெட்டி நாடாக்கி
கள்ளரெல்லாம் உள் அமர்த்தி
நாடுபெற்று வாராக
ராஜாக்கள் உங்கள் ஐயா.

முல்லைப்பூக் கட்டடமாம்
முகப்பு எல்லாம் உத்திரமாம்
முகப்பைத் திறந்து விட்டால்
முல்லைப்பூ வாசனையாம்
முல்லைப்பூ வாசனையாம்
உங்கள் ஐயா மூத்தவுக யோசனையாம்.

நெத்திக்குச் சிட்டி
நிழல் பார்க்கக் கண்ணாடி
காலுக்குத் தண்டை
கைக்குக் கணையாளி
கொண்டு வந்தும் காண்பாக
கோதைக் கிளிக்கம்மானார்.

கோர்ட்டைத் திறந்து
குறிச்சியிலே உட்கார்ந்து
ஜட்ஜோடே பேசும்
தருமவா பேரனோ
வக்கீலோடே பேசும்
மகராசர் பேரனோ.

**–சோமலே**

## நகரத்தாரின் பாரம்பரியத்தில் முக்கிய இடம்பெறும் குலதெய்வங்கள்

கோவில் தழுவிய குடிகளாக வாழும் நகரத்தார்கள் ஒன்பது நகரக் கோவில்களில் தங்கள் கோவில், தங்கள் ஊரில் உள்ள நகரக்கோவில் ஆகியவற்றோடு ஒரு குலதெய்வக் கோவிலும் சென்று வழிபடுவதை மரபாகக் கொண்டுள்ளனர். ஒவ்வொரு நகரத்தார் குடும்பத்தாரும் தலைமுறை தலைமுறையாக ஒரு குறிப்பிட்ட கோவிலைக் குலதெய்வக் கோவிலாகக் கொண்டு அதனைச் சிறப்பு நிலையில் வழிபடுவர்.

நகரத்தார்களின் குலதெய்வக் கோவில்கள் அனைத்தும் செட்டிநாட்டு எல்லைக்குள் அமைந்துள்ளன. குலதெய்வக் கோவிலை வழிபடும் நகரத்தார்கள் அதனை ஒட்டிய பகுதியிலேயே தொடக்கத்தில் வாழ்ந்திருக்க வேண்டும் என்றும் பின்னர் பல்வேறு ஊர்களுக்கும் குடிபெயர்ந்திருக்க வேண்டும் என்றும் ஒரு கருத்து நிலவுகிறது.

அரியக்குடிச் சீனிவாசப் பெருமாளையும் குன்றக்குடி ஆறுமுகப் பெருமானையும் சில நகரத்தார் குடும்பத்தினர் குலதெய்வமாக வழிபடுகின்றனர் என்பதைத் தவிர ஏனைய குலதெய்வங்கள் அனைத்தும் சிறுதெய்வங்களாகவே காணப்படுகின்றன. பெரும்பாலும் அந்தணரல்லாதவர்களே இக்கோவில் பூசாரிகளாக அமைந்துள்ளனர்.

காவல் தெய்வங்களான ஐயனார், கருப்பர் ஆகியோரோடு அம்மனையும் நகரத்தார்கள் குலதெய்வங்களாகக் கொண்டுள்ளனர். அவை வேறுவேறு ஊர்களில் வேறுவேறு பெயர்களில் அமைந்துள்ளன. பெரும்பாலான கோவில்களில் குலதெய்வம் மூலவராக விளங்கச் சில கோவில்களில் மட்டும் குலதெய்வம் பரிவார தெய்வங்களில் ஒன்றாக விளங்குகிறது. சில குலதெய்வக்கோவில்களில் அதை வணங்குவோர் தங்கள் குடியிற் பிறந்த முன்னோரையும் பரிவார தெய்வமாக்கி வழிபடுகின்றனர். பெரும்பாலும் பெண்களே இவ்வாறு வழிபடப் பெறுகின்றனர்.



## நகரத்தாருக்கே உரித்தான மரபுச்சொற்களில் சில

| | |
|---|---|
| கொண்டுவிக்கப் போதல் | – லேவாதேவித் தொழிலுக்காகச் செல்லுதல் |
| தொலைக்குச் செல்லுதல் | – வெளிநாடு செல்லுதல் |
| பெட்டியடி | – லேவாதேவிக் கடை இருக்கும் இடம் |
| அடுத்தாள் | – கடையில் எழுத்தர் பணி |
| கைபழகுதல் | – தொழில் கற்றுக் கொள்ளுதல் |
| ஒரு கணக்கு | – மூன்று ஆண்டுகள் |
| அடத்தி | – கடைக்குச் சார்பாளர் |
| ஈரெட்டு | – ஐயமாகச் செய்யப்படும் வணிகம் |
| ஐந்தொகை | – வரவு செலவு இருப்புக் கணக்கு. |
| தன்னொத்துப் போதல் | – இலாப நட்டம் இல்லாத வணிக நிலை |

**வீட்டுப் பொருள்கள் குறித்த கலைச் சொற்கள்**

| | |
|---|---|
| குறிச்சி | – சாய்வு நாற்காலி |
| ஒலுகு | – சாய்ந்து கொள்ளும் பெரிய தலையணை |
| திண்டு | – நீளமான தலையணை |
| கொட்டான் | – ஓலையில் செய்யப்பட்ட சிறியபெட்டி |
| வக்கூடு | – கைப்பிடியோடு கூடிய ஓலைப்பெட்டி |
| பழப்பெட்டி | – நடுத்தர அளவு ஓலைப்பெட்டி |
| கடகாம் | – பெரிய அளவிலான ஓலைப்பெட்டி |
| வட்டி | – உணவு உண்ணப் பயன்படும் தட்டு |
| கிண்ணி | – கறிவகைகள் வைத்துக் கொள்ளும் சிறிய தட்டு |
| கும்பா | – உணவுண்ணப் பயன்படும் கலம் |
| போகிணி | – தண்ணீர் முகக்கும் பாத்திரம் (தம்ளர்) |
| சலிக்கி சிலாத்தி | – பொருள்களைச் சலிக்கப் பயன்படும் வலைத்தட்டு |
| சொளகு– சுளகு | – புடைக்கும் ஓலைத்தட்டு (முறம்) |
| பணிக்கம் | – எச்சில் துப்பும் கிண்ணம் |
| படுதா | – திரை |

| | | |
|---|---|---|
| மரவை | – | மரத்தட்டு |
| தடுக்கு | – | உட்காரப் பயன்படும் ஓலை அல்லது துணி இருக்கை |
| பாதாள கரண்டி | – | கிணற்றில் விழுந்த பொருள்களைத் தேடி எடுக்கப் பயன்படுத்தும் இரும்புக் கருவி. |
| குந்தாணி | – | உரல் |

## பிறகலைச் சொற்கள்

| | | |
|---|---|---|
| நடையன் | – | காலணி |
| தடுமன் | – | சளி, நீர்க்கோவை |
| நூலாம்படை | – | தூசி |
| புள்ளி | – | திருமணமான ஆண்மகன் (குடும்பம்) |
| வளர வந்தவன் | – | குடும்பம் வளர்ச்சிகாண சுவீகாரம் வந்தவன் |
| உருவாஞ்சுருக்கு | – | எளிதில் அவிழ்க்கத் தக்க முடிச்சு |
| படுமுடிச்சு | – | எளிதில் அவிழ்க்க இயலாத முடிச்சு |
| தன்னைப் பேணி | – | சுயநலவாதி |
| வளத்தியானவன் | – | உயரமானவன் |

பிறமொழிச் சொற்களைத் தமிழாக்குவதிலும் நகரத்தார் சிறந்த மரபைப் பின்பற்றுகின்றனர். இயன்றால் தனித்தமிழ்ச் சொல்லை உருவாக்குவதும் இல்லையேல் தமிழ்ஒலி முறையில் அச் சொல்லையே அமைப்பதும் அவர்கள் பின்பற்றும் முறையாகும்.

| | | |
|---|---|---|
| பிரஸ் பட்டன் | – | அமுக்குப் பொத்தான். |
| உல்லன் | – | கொச்சி நாய்க் கயிறு / கம்பளி |
| டர்க்கி டவல் | – | தேங்காய்ப்பூத் துண்டு |
| கவுண்டர் பாயில் | – | அடிக்கட்டை |
| டிராப்ட் | – | உண்டியல் |
| பஸ் ஸ்டாண்ட் | – | காரடி |
| ரயில்வே ஸ்டேஷன் | – | ரயிலடி |
| ஹியரிங் | – | ஈரங்கி |
| கெட்டில் | – | கேத்தல் |
| சோப்பு | – | சவுக்காரம் |



## மரபு

நகரத்தார் பேச்சுத் தமிழில் பல மரபுகள் காலங்காலமாகப் பின்பற்றப்பட்டு வருகின்றன. திருமணம் போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளுக்குப் போடப்படுவதைக் கொட்டகை என்றும் இழவு வீட்டில் போடப்படுவதை மட்டும் பந்தல் என்றும் குறிப்பிடுவர். அவ்வாறே மங்கல நிகழ்ச்சிக்குச் சென்று திரும்பும் போது ‘போயிட்டு வரேன்’ என்று சொல்லி விடைபெறும் நகரத்தார் இழவு வீட்டில் ‘போறேன்’ என்று மட்டுமே சொல்லி விடைபெறுவர்.

சாமிவிளக்கு, குத்துவிளக்கு முதலியவற்றை அணைக்கச் சொல்லும் பொழுது விளக்கை மலையேற்று என்றோ விளக்கை நல்லா வை என்றோ சொல்வது மரபு. வெளியில் புறப்படுபவர்களிடம் எங்கே போறீங்க என்று கேட்பது அபசகுனமாகையால் ரொம்பத் தூரமா? என்று கேட்பார்கள்.

“சும்மா குத்தமில்லை” போன்ற மரபுச் சொற்கள் இடத்திற்கும் சூழலுக்கும் ஏற்ப வேறுவேறு பொருள்களைத் தருகின்றன.

பிறர்மனம் புண்படாமல் பேசுகிற இயல்புடைய நகரத்தார்கள் அழகில்லாத பெண்ணை உள்ளது போல இருக்கிறாள் என்றும் கறுப்பு நிறப் பெண்ணை மாநிறம் உடையவள் என்றும் சொல்லுவார்கள்.

## தனிச் சொல் வழக்கு

நகரத்தார் பேச்சுவழக்கில் மட்டும் இடம்பெறுகிற தனிச் சொற்களில் குறிப்பிடத்தக்க சில சொற்களும் அவற்றின் பொருளும் வருமாறு

| | | |
|---|---|---|
| அழுத்தம் | – | சிக்கனம் |
| எதவா | – | கவனம், நிலைத் தாழ்வு |
| ஏவம் கேட்டல் | – | பிறர்க்காகப் பரிந்து பேசுதல் |
| ஒப்பினை | – | மன ஈடுபாடின்றிப் பேசுதல் |
| ஒள்ளத்தி | – | மிகச்சிறிய அளவில் |
| ஓவியம் | – | மிகச் சிறந்த பாராட்டு |
| கணிசம் | – | மிகுதியான அளவு |
| கருக்கடை | – | மிகுந்த கவனம் |
| குட்டி | – | வீட்டு வேலை செய்யும் சிறுமி |
| கூதரை | – | கவனமில்லாமல் செயல்படுபவர் |
| கூறு கெட்டவன் | – | அறிவில்லாதவன் |

| | | |
|---|---|---|
| கைஆவல் | – | அவசரத் தேவைக்காக வைத்திருத்தல் |
| கொண்டி | – | போக்கிரி, பொல்லாதவன் |
| தாக்கல் | – | செய்தி |
| திருத்தம் | – | அழகாக |
| மரப்பாச்சி | | |
| சிட்டாட்டம் | | |
| உருவிவிட்டது போல | – | அழகிய பெண் |
| கொப்புப்போல | | |
| பெரும்புடி | – | அழகற்ற |
| பெரும்பொட்டு | – | குண்டான |
| தொக்கடி | – | மிகக்குறைந்த விலையில் வாங்குதல் |
| தோது | – | செவ்வி / சரிநிகர் |
| படுத்தடி | – | உண்மைக்கு மாறாக வல்லடி வழக்குப் பேசுதல் |
| பண்டி | – | தூய்மையற்றவன் |
| பாண்டல் | – | தூய்மையற்றவள் |
| பிருசுபிடித்தல் | – | கெஞ்சுதல் |
| பெரியதனம் பேசுதல் | – | கடுமையாகப் பேசுதல் |
| மட்டுப்படுதல் | – | விளங்குதல் |
| மருக்கோளி | – | பைத்தியம், முட்டாள் |
| மாம்பூவாசனை | – | அனுசரித்துப் போதல் |
| மாறல் | – | வாயில் |
| மூதலித்தல் | – | மெய்ப்பித்தல் |
| மெனக்கெடுதல் | – | பிறிதொரு அலுவலைக் கவனியாது ஒன்றில் முழுமூச்சாக ஈடுபட்டுப் பார்த்தல் |
| மேலைக்கு | – | அடுத்த ஆண்டு |
| வறளி | – | பிடிவாதக்காரர் |
| வெள்ளனா | – | அதிகாலையில் |
| வெரசா | – | விரைவாக |

பழங்காலந் தொட்டு இன்றுவரை மரபுவழியாக நல்லதமிழைப் பேசிவருவது நகரத்தாரின் இயல்பு. சொற்களைச் சிதைக்காமலும் ஒலிகளை மாற்றாமலும் பிறமொழிச் சொற்களைத் தமிழ் ஒலியாக்கியும் திருத்தமாகத் தமிழ்மொழியைப் பேசிவருவது நகரத்தாருக்கேயுரிய தனிச்சிறப்பாகும்.



# செட்டிநாட்டில் வழங்கும் தமிழ்ச் சொற்கள்

| | | |
|---|---|---|
| கடகால் | – | வாளி |
| கழுசறை | – | கீழ்த்தரமான |
| கழுத்தீரு | – | கழுத்து உரு |
| கிருத்துவம் | – | குறும்பு |
| கூதரை | – | இழிந்த குணமுடையவர் |
| பிருசுபடி | – | கெஞ்சுவது |
| போகணி | – | குவளை |
| மெனக்கெட்டு | – | வலிந்து வந்து |
| இஞ்சே | – | பெண்களை விளிப்பது இங்கே என்பதன் மருஉ |
| ஊருணி | – | குடிநீர் குளம் |
| வெள்ளன | – | அதிகாலையில் |
| வெளம் | – | கோபம் |
| வட்டி | – | சாப்பாட்டுத் தட்டு |
| நொண்ணன் | – | உன் அண்ணன் |
| எசகேடு | – | இடையூறு |
| அலக்கழிப்பது | – | கேலிசெய்வது |
| ஒறண்டை | – | வம்புக்கு இழுத்தல் |
| எதவாக | – | பக்குவமாக |
| ஒள்ளத்தி | – | கொஞ்சம் |
| மூதலிக்கிறது | – | நிரூபிப்பது |
| மருக்கொலி | – | விவரம் இல்லாதவர் |

## நகரத்தாரை அடையாளம் காட்டும் பட்டப் பெயர்கள்

நகரத்தார் பண்பாட்டில் பட்டப்பெயர் சூட்டி அழைப்பது அவர்கட்குரிய சிறப்புக் கூறாகும். ஒரு குடும்பத்தை அல்லது ஒருவரை எளிதில் சுட்டி அடையாளம் கூறும் வகையில் அவரோடு தொடர்புடைய ஒரு பெயரைப் பட்டப்பெயராக வைத்து அழைப்பதுண்டு. குடும்பத்தின் பட்டப் பெயர் எனில் தொடர்ந்து வாரிசுகளுக்கு அப்பெயர் வழங்குவதுண்டு. இடம் பெயர்தல், தொழில் செய்யும் ஊர், கல்வித்தகுதி, பண்புகள் காரணமாகப் பட்டப் பெயர் சூட்டப்படுவது இயல்பு.

**குடிபெயர்ந்த வரலாறு கூறும் பட்டப் பெயர்கள்**

சேந்தணியார் வீடு, வயலார் வீடு, ஆலம்பட்டார் வீடு, இராங்கியத்தார் வீடு, காரைக்குடியில் கீரணிப்பட்டியார் வீடு, சிவரக்கோட்டையார் வீடு

தொழில், தொழில்செய் ஊர்களால் வந்த பட்டப்பெயர்கள்

அரிக்கன் பழ, கம்பார் நா, கள்ளிக்கோட்டையார் வீடு, தொண்டியார் வீடு, யாழ்ப்பாணத்தார் வீடு, கரூரார் வீடு, காங்கேயத்தார் வீடு, அம்மாப்பேட்டையார் வீடு, ரெங்கோன் சேதுச் செட்டியார் வீடு, சிங்கப்பூர் சேக்கப்ப செட்டியார் வீடு, ஏரோப்ளேன் அண்ணாமலை, வெளிநாட்டுக்குப் பணம் அனுப்ப உண்டியல் வழங்கிய கடை வைத்திருந்த குடும்பத்தார் உண்டியல் கடைக்காரர் வீடு, மிஷின்காரர் வீடு, புகையிலைக்காரர் வீடு, வைரம் அருணாசலம் செட்டியார்

பாகவதர், பாட்டுக்கவி ராமன் செட்டியார், புளுட் சோம, பாத்திரக்கடையார் வீடு,

சுவீகாரம் வந்ததால் வழங்கும் ஊர்ப் பெயர்கள்

அரிமழம், அழகப்பன்

கொள்கையால் வந்த பட்டப்பெயர்கள்:

செட்டியார் காந்தி, காந்தி நாவன்னா

உருவத்தால் குணத்தால் வந்த பட்டப் பெயர்கள்:

மைனர், பிடிவாதக் குணம் உள்ளவர்களுக்கு கல்வெட்டு, கறார், நெட்டை, குட்டை ஆகிய உடல் அமைப்புக்கள் பெயருக்கு முன்னும்



சேர்த்து சூட்டப்படும். சிவபூசை நெறி தவறாமல் செய்பவர்க்கு பூசை நடேசன் செட்டியார், ஆறுவிரல் அண்ணாமலை செட்டியார், சலவைவேட்டி, அழுக்கு வேட்டி என்ற பட்டமும் மக்களால் சூட்டப்பெறும்.

**கிராமம் வாங்கியதால் வந்த பெயர்கள்:**

ஜமீந்தார் வீடு, ரெட்டையம்பாடி ஜமீந்தார், சின்ன மைனர் வீடு, பெரிய மைனர் வீடு, ஆண்டிபட்டி ஜமீந்தார், கோனூர் ஜமீந்தார்.

**அறச் செயல்களால் வந்த பெயர்கள்:**

சத்திரத்தார் வீடு, தண்ணீர்ப் பந்தலார் வீடு, பெருமாள் கோவிலார் வீடு, கார்த்திகை மடத்தார் வீடு, பசுமடத்தார் வீடு, பள்ளிக்கூடத்தார் வீடு.

திருப்புனவாசலில் திருப்பணி செய்தவர்கள் திருப்புனவாசலார் வீடு, சீர்காழி ராம.வீடு, கம்பர் இராமநாதன் செட்டியார், பழநிக் காவடிகளை அழைத்துச் செல்லும் குடும்பத்தாருக்குக் கண்டனூரில் சாமியாடிச் செட்டியார் வீடு என்றே பெயர்.

**வீட்டால் அமைந்த பெயர்கள் :**

ஆயிரம் ஜன்னலார் வீடு, கண்ணாடியார் வீடு, சிங்கம் பழ. வீடு, கொட்டகைக்காரர் வீடு, சந்தைப் பேட்டையார் வீடு, செக்கடி ராம.வீடு, வாழைமரத்தார் வீடு, நெல்லிமரத்தார் வீடு, வேப்பமரத்தார் வீடு, கொக்குப் புளி ராம. வீடு, புதையலெடுத்த வீடு.

கல்வியால் புகழ்பெற்றோர் வீட்டைப் பாரிஸ்டர் வீடு, எம்ஏபிஎல் வீடு, புலவர் வீடு, பி.ஏ. குமரப்ப செட்டியார், இன்டர் நாகப்ப செட்டியார், பி.காம் வீரப்பசெட்டியார் வீடு. விலாசங்களாலும் பட்டப்பெயர் வருவதுண்டு. அமராவதி புதூரில் வயி.நாக.ராம. குடும்பத்தாரை வயிநாகரம் என்றே அழைப்பர்.

இவ்வாறு சூட்டப்பட்ட பெயர்கள் நகரத்தாரின் சொல்லாடல் திறனையும், வரலாற்று உணர்வையும் எதனையும் தனித்து அடையாளம் காணும் நுட்பமான மனநிலையையும் நகைச்சுவை உணர்வையும் விளக்குகின்றன. இப்பெயர்கள் காலங்காலமாக நிலைத்து வழங்கும் நிலைபேறுடையன.

# நகரத்தார் இல்லங்களில் அடிக்கடி கூறப்படும் பழமொழிகள்

1. அம்மான் மகள் ஆனாலும் சும்மா வரமாட்டாள்
2. ஆற்றுக்குள்ளே நின்று அரஹரா சிவ சிவா என்றாலும் சோற்றுக்குள்ளே இருக்கிறதாம் சொக்கலிங்கம்
3. இருக்கிறவங்க சாப்பிட்டா மருந்துக்கு இல்லாதவங்க சாப்பிட்டால் வயத்துக்கு ஆத்த மாட்டாம
4. இல்லாத பிள்ளைக்கு இலுப்பைப் பூ சர்க்கரை
5. செட்டி சிங்காரிப்பதற்குள் பட்டணம் கொள்ளைபோய்விடும்
6. தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்
7. பிள்ளையில்லா வீட்டில் கிழவன் துள்ளி விளையாடுகிறான்.
8. பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்
9. மயிலே மயிலே இறகு போடு என்றால் போடுமா?
10. மாதா ஊட்டாததை மாங்காய் ஊட்டும்
11. விதை ஒன்று போட சுரை ஒன்று முளைக்காது
12. விடிய விடிய ராமாயணம் கேட்டு சீதைக்கு ராமன் சித்தப்பா என்றானாம்
13. வாயில் அடித்தாலும் வயிற்றில் அடிக்காதே
14. பொய் சொன்ன வாய்க்கு போசனம் கிடைக்காது
15. பெண் குழந்தை வீட்டில் இருப்பதைக் கொண்டு செல்லும், ஆண் குழந்தை வீட்டிற்கு கொண்டு வரும்.
16. பள்ளிக் கணக்கு புள்ளிக்கு உதவாது
17. கப்பல் கவிழ்ந்தாலும் கன்னத்தில் கை வைக்காதே

**உபதேசம் கேட்டல்**

நகரத்தார் பண்பாட்டில் அவர்கள் சமய வழிபாட்டிற்குக் கொடுத்திருந்த முதன்மையைக் காட்டுவது உபதேசம் கேட்டல் ஆகும் நகரத்தார்களில் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் உபதேசம் கேட்க வேண்டும் என்பது கட்டாய வழக்கமாக இருந்தது. இப்பொழுதும் அறுபதாண்டு நிறைவு மணிவிழாக் கொண்டாடும் முன்னராவது உபதேசம் கேட்பது என்ற நடைமுறை வழக்கம் உண்டு. ஆனால் பண்டைக்காலத்தில் நகரத்தார்கள் இளமையிலேயே உபதேசம் கேட்டு நாள்தோறும் அனுஷ்டானம் செய்துவந்தார்கள். காவிரிப்பூம்பட்டினம் பட்டினத்தார் திருவிழாவில் முதல்நாள் பட்டினத்தார் பிறப்பு, இரண்டாம் நாள் உபதேசம் கேட்டல், மூன்றாம் நாள் கல்யாணம் என்ற வரிசையில் விழா நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. திருமணத்திற்கு முன்பே உபதேசம் கேட்பது நமது வழக்கமாக இருந்தது என்பதை இது காட்டுகிறது.

**குடும்ப சிறப்பு நிகழ்ச்சிகள்**

ஒரு குழந்தை தாய் வயிற்றில் கருவானதிலிருந்து அக்குழந்தை, பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து, மறையும் வரை, ஏன் மறைந்த பின்னும் கூட அது தொடர்பான சிறப்பு நிகழ்ச்சிகள் குடும்பங்களில் நிகழ்வது என்பது சமூகஇயல்பு. நகரத்தார் சமூகத்தில் இவ்வாறான சிறப்பு நிகழ்ச்சிகளைப் பிறப்பு முதல் இறப்பு வரை வரிசைப் படுத்தி பார்ப்போமா.

**தீர்த்தம் அல்லது மருந்து குடித்தல்:**

தாயின் வயிற்றில் கரு உருவாகும் போது, அது அத்தாயின் முதற் கருவாக இருந்தால், குழந்தை கருவில் இருக்கும் பொழுதே அது தொடர்பான குடும்பச்சிறப்பு நிகழ்ச்சிகள் நகரத்தார் சமூகத்தில் தொடங்கிவிடுகின்றன. அந்தந்தக் குடும்பத்தின் பழக்கத்திற்கேற்ப, முதன் முறையாகக் கருவுற்ற நிலையில் கருவின் ஐந்தாவது அல்லது ஏழாவது திங்களில் தாய் தீர்த்தம் அல்லது மருந்து குடிப்பாள்.



**பிள்ளை பெறக் கூட்டுதல் :**

கரு இன்னும் சிறிது வளர்ந்த பிறகு அதன் ஏழு அல்லது ஒன்பதாவது திங்களில் கருவுற்ற தாயை அவளது தாய்வீட்டார் பிள்ளைபெற அழைத்துச் செல்வர். இதுவும், பிறக்கப்போவது தலைப்பிள்ளையாயின், ஓரளவு சிறப்பு விழாவாக நிகழும் இல்லையேல் கருவுற்ற தாயின் பெற்றோர் மட்டும் அவள் வீட்டிற்கு வந்து அவளை அழைத்துச் செல்வர். இரண்டு அல்லது மூன்று குழந்தைகட்குப் பின்னர் இச்சடங்கு நிகழாமல், கருவுற்ற தாய், பிள்ளைப்பேற்றைத் தன் வீட்டிலேயே வைத்துக் கொள்வதும் உண்டு.

**பேறு சொல்லல் – கேட்டல் :**

பிள்ளை பிறந்தவுடன்,. பிள்ளையின் ஆயாள் வீட்டினர் தம் உறவினர், பங்காளிகட்குத் தம் வீட்டில் மிட்டாய்த் தட்டு வைத்துப் பேறு சொல்வர், அவர்கள் வந்து பேறு கேட்டுச் செல்வர். பிள்ளையின் அப்பத்தாள் வீட்டினர் தம் உறவினர், பங்காளிகட்குத் தம் வீட்டில் மிட்டாய்த்தட்டு வைத்துப்பேறு சொல்வர். அவர்கள் வந்து கேட்டுச் செல்வர். இந்நிகழ்ச்சியும் தலைப்பிள்ளை என்றால் மிகச் சிறப்பாக நிகழும்.

**பிள்ளை பார்க்க வருதல் :**

பிறந்தது தலைக் குழந்தையாக இருப்பின், பிள்ளையின் அப்பத்தாள் வீட்டினர், தமக்கு மிக நெருங்கிய உறவினர் சிலரை அழைத்துக் கொண்டு பிள்ளையைப் பார்ப்பதற்காக, பிள்ளையின் ஆயாள் வீட்டிற்கு வருவர். அவர்கட்கு அங்கே விருந்து நடைபெறும்.

**பிள்ளையை அழைத்துச் செல்லுதல் :**

பிள்ளை பிறந்து ஒரு திங்கள் ஆனதும் பிள்ளையையும் தாயையும் ஆயாள் வீட்டிலிருந்து அப்பத்தாள் வீட்டிற்கு அழைத்துச் செல்வர். பிறந்தது தலைப்பிள்ளையாக இருப்பின், இதுவும் சிறப்பான நிகழ்ச்சியாக, இருபக்கத்திலும் நெருங்கிய உறவினர்கள் அழைக்கப்பட்டு விருந்து முதலியவற்றோடு நிகழும்.

## பிள்ளைக்குக் காது குத்தல் :

பிள்ளை பிறந்து பதினாறாவது அல்லது இருபத்தோராவது நாளில் அதற்குக் காது குத்தித் தோடு அணிவிக்கப்பெறும். எனவே பெரும்பாலும் இந்நிகழ்ச்சி ஆயாள் வீட்டில் நிகழும்.

## பெயர் வைத்தல் :

பிள்ளைக்குப் பெயர் வைப்பது, வெளியாரை அழைத்து விழாவாக நடத்தப்பெறுவதில்லை. ஆயினும் ஒரு சடங்காக அந்தந்தக் குடும்ப மரபிற்கேற்ப நடத்தப் பெறுகிறது. சிலர் குலதெய்வக் கோவிலுக்குப் பிள்ளையைக் கொண்டு சென்று அங்கே அர்ச்சகரால் முதன் முதலில் பெயர் சொல்லிக் கூப்பிடச் செய்வர். பெரும்பாலானவர்கள் தம் இல்லத்திலேயே, குடும்பப் பெரியவரால் பெயர் சொல்லி அழைக்கச் செய்வர். இச்சடங்கு பெரும்பாலும் முப்பதாவது நாள் நடைபெறும். முதல் ஆண்குழந்தைக்கு அப்பத்தா வீட்டு ஐயா பெயர், பெண் குழந்தைக்கு அப்பத்தா பெயர். இரண்டாவது ஆண்குழந்தைக்கு ஆயா வீட்டு ஐயாபெயர், பெண் குழந்தைகளுக்கு ஆயாபெயர் வைப்பது மரபு. தற்போது நாகரிகம் முறையில் மரபுப் பெயருக்கு முன்பு நாகரிகப் பெயர் ஒன்றும் சேர்க்கிறார்கள் (உ.ம்) அருண் அஸ்வின்.

## முதல் முடி எடுத்தல் :

அந்தந்தக் குடும்பத்தின் பழக்கத்திற்கு ஏற்ப, பிள்ளை பிறந்து ஒரு திங்கள் அல்லது ஆறு திங்கள் அல்லது ஒராண்டு முடிந்ததும் பிள்ளைக்கு முதல் முறையாக முடி எடுப்பார்கள். இது நிகழும் இடமும் அக்குடும்பப் பழக்கத்தைப் பொறுத்தே. குலதெய்வக் கோவிலில், உள்ளூர்க் கோவிலில், அல்லது குறிப்பிட்ட ஏதோ ஒரு கோவிலில் என இது நிகழும்.

## தொட்டில் கட்டுதல் :

நகரத்தார் வாழும் ஊர்களிலெல்லாம் கோவில் திருவிழாக்களில் பிள்ளைகளுக்குத் தொட்டில் கட்டுதல் என்பது ஒரு சிறப்பு நிகழ்ச்சி. பணியாளர்கள் கரும்பைத் தூக்கிக் கொள்ள, அக்கரும்பில் சேலைபோட்டுத் தொட்டில் கட்டப்பெறும். அத்தொட்டிலில் பிள்ளையைப் போட்டு, தொட்டிலைத் தூக்கிக் கொண்டு, மேளதாளத்துடன்



கோவிலை வலம் வருவது இந்நிகழ்ச்சி ஆகும். கத்தப்பட்டு – தொட்டியத்துக் கருப்பர் கோவிலில் மட்டும், மாலையில் ஒரே நேரத்தில் எல்லாத் தொட்டில்களும் சேர்ந்து குழந்தைகளுடன் கோவிலை வலம் வருவார்கள்.

## விடையாட்டுப் பெட்டி வேவு :

இது தலைப் பிள்ளைக்கு மட்டுமே நிகழும் ஒரு சிறப்பு நிகழ்ச்சி.தலைப்பிள்ளை பிறந்து சில திங்களுக்குப் பிறகு, ஆயாள் வீட்டினர், நெருங்கிய உறவினர்கள், பங்காளிகளோடு, அப்பத்தாள் வீட்டிற்கு வந்து, விளையாட்டுப் பெட்டி வேவு எடுப்பர். இது மேற்கு வட்டகையில் இல்லை.

## புதுமை :

பிள்ளை தலைப்பிள்ளையாக இருந்தால், அதன் முதலாண்டு நிறைவு நாள், புதுமை என்ற பெயரோடு ஒரு சிறப்பான விழாவாகக் கொண்டாடப் பெற்று வந்தது. இப்போது இவ்விழா நிகழ்வதில்லை.

## கிலுக்கி எடுத்தல் – அம்பு போடுதல் :

பிறந்த பிள்ளை ஆண்பிள்ளையாக இருப்பின், அதன் இளமைக்காலம் முழுவதும் ஆண்டுதோறும் புரட்டாசி மாதம், மகார் நோன்பு விழாவின் தொடக்க நாளன்று கிலுக்கியெடுப்பும், இறுதி நாளன்று அம்பு போடுதலும் நடைபெறும்.

## கொப்பி கொட்டுதல் :

பிறந்த பிள்ளை பெண் பிள்ளையாக இருப்பின், அதன் இளமைக்காலம் முழுவதும், ஆண்டுதோறும், தை மாதம் மாட்டுப்பொங்கலன்று, கொப்பி கொட்டுதல் நடைபெறும். தற்போது நடைமுறையில் இல்லை.

## பள்ளியில் வைத்தல் :

முற்காலத்தில் நகரத்தார் சமூகத்தில், பிள்ளைக்கு ஐந்து வயது நிறைந்தவுடன் பள்ளியில் வைத்தல் என்பது ஒரு சிறப்பு நிகழ்ச்சியாகவே நடைபெறும். புரட்டாசி மாதம், விசயதசமி அன்று, பிள்ளையைச் சேர்க்க நினைக்கும் பள்ளியிலிருந்து, ஆசிரியர்

பிள்ளைகள் (இருபது, முப்பது பேர்கள்) ஆகியோரை வீட்டிற்கு அழைத்து வந்து அவர்கட்குச் சிற்றுண்டி கொடுத்து, அவர்களோடு பிள்ளையைப் பள்ளிக்கு அனுப்புவர். பள்ளிப்பிள்ளைகள் வந்து கோலாட்டம், கும்மி என ஆடிப்பாடி ஊர்வலமாக அழைத்துச் செல்வர். பெற்றோரும், நெருங்கிய உறவினரும் கூடச் செல்வர். பள்ளியில் நெல் கொட்டி, அதில் ஆசிரியர், பிள்ளையின் கையைப் பிடித்து 'அ' எழுதிக் கல்வியைத் தொடங்கி வைப்பார். இது அக்கால மரபு. இப்போது மூன்றாவது ஆண்டு நிறைவில் பிள்ளைகள் மழலையர் பள்ளிக்கு அனுப்பப்பெற்று விடுவதால் இவ்விழாவிற்கு இப்போது வாய்ப்பே இல்லை.

**சடங்கு கழித்தல் :**

பிறந்த பிள்ளை பெண் பிள்ளையாக இருந்தால், அவள் வயதுக்கு வந்தவுடன், நிகழும் சிறப்பு நிகழ்ச்சி இது.

**பழந்தேங்காய் கொடுத்தல் :**

திருமணம் நிகழ்ந்த பின், மாப்பிள்ளையின் ஊரில் அல்லது பெண்ணின் ஊரில் கோவிலில் செவ்வாய் எனப்படும் தேர்த்திருவிழா நிகழும் போது, பெண்ணின் தாய் வீட்டினர் பிள்ளையின் தாய் வீட்டினருக்குப் பழமும், தேங்காயும் கொடுத்து, விருந்து நிகழ்த்திச் சிறப்பிப்பர்.

**முதலாண்டு தீபாவளிக்கு வருதல் :**

திருமணம் நிகழ்ந்த பின் வரும் முதலாண்டு தீபாவளிக்கு மணமக்களை, பெண்ணின் தாய் வீட்டினர் அழைத்து, அவர்களுக்குப் புத்தாடை முதலியன கொடுத்து, விருந்து வைத்துச் சிறப்பிப்பர்.

**பொங்கற்பானை கொடுத்தல் :**

திருமணம் நிகழ்ந்த பின் வரும் முதற்பொங்கலிலிருந்து ஆண்டுதோறும் பொங்கலை முன்னிட்டுத் தாய் வீட்டிலிருந்து பெண்ணுக்கு அளிக்கப்படும் சிறப்புச் சீர். இது நகரத்தார் சமூகத்தில் தொன்று தொட்டு வரும் தமிழ் மரபு தழுவிய சிறப்பு நிகழ்ச்சி ஆகும்.



**வேறுவைத்தல் :**

திருமணம் நிகழ்ந்து ஓராண்டு முடிந்தவுடன், அல்லது சிறிது காலம் சென்றபின், புதுமணமக்களைத் தனிக் குடும்பமாக அமைப்பதற்காக ஒரு சிறப்பு நிகழ்ச்சி நடைபெறும். முன்பெல்லாம் நெருங்கிய உறவினர்கள், பங்காளிகள் அழைக்கப்பெற்று ஒரு விழாவாக இது நிகழ்ந்தது. இது நகரத்தாருக்கே ஒரு சிறப்பு நிகழ்வு.

**மணி விழா :**

ஐம்பத்தொன்பது சாந்தி செய்து கொண்டவரின் அறுபதாம் ஆண்டு நிறைவு நாளன்று நடைபெறுவது மணிவிழா எனப்படும். இது சாந்திக் கல்யாணம் எனப்படுகிறது

**பீமரத சாந்தி :**

மணிவிழாக் கண்டவரின் எழுபதாவதாண்டு நிறைவு நாளைக் கொண்டாடும் விழா, இதனைப் பெரும் விழாவாகக் கொண்டாடுபவர்களும் உண்டு கொண்டாடாதவர்களும் உண்டு. இவ்விழா ஏறத்தாழ மணிவிழாவின் நடைமுறைகளுடனேயே கொண்டாடப்பெறும்.

**பிறையாயிரம் கண்ட பெருவிழா:**

பீமரத சாந்தி செய்து கொண்டவருக்கு 82 ஆண்டுகள் நிறையும்போது, 1008 மூன்றாம் பிறை நாட்கள் அவர், வாழ்வில் எப்போது கடக்கின்றன எனக் கணக்கிட்டு, அது கடந்த உடன் நிகழ்த்தப்படும் இவ்விழாவைச் சதாபிஷேகம் என்பர்.

**தாலி கொண்டு வருதல் :**

ஐம்பத்தொன்பது சாந்தி, சதாபிஷேகம் ஆகிய விழாக்களை ஒரு குடும்பத்தினர் கொண்டாடினால், அவ்விழா நாயகியாகிய ஆச்சியின் தாய் வீட்டினர், சீராக, பொற்றாலி, புத்தாடை முதலியவற்றைக் கொண்டு வந்து கொடுப்பது நகரத்தார் சமூக மரபு. மேலே காட்டப்பெற்ற மூன்று விழாக்களில் மணிவிழாவிலும் சதாபிஷேகத்திலும், தாலி கொண்டு வருதல் வழக்கம்.

## இழவு கூட்டுதல் :

வாழ்ந்து சிறந்த போது குடும்பச் சிறப்பு நிகழ்ச்சிகள் நடந்ததுபோல, ஒருவர் இறந்தாலும், சமூகம் பங்கு கொள்ளும் சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்துவது நகரத்தார் மரபு. அதனை இழவு கூட்டுதல் என்பர்.

## தலைத் திதி :

ஒருவர் இறந்து ஒராண்டு நிறைவெய்தியதும், அவரது நினைவு நாள், குறிப்பிட்ட தமிழ்மாதம், குறிப்பிட்ட திதியன்று கொடுக்கப்பெறும். இதனைத் தலைத் திவசம் அல்லது தலைத்திதி என்பர். இந்தத் திவசம், அல்லது திதி பின்னரும் ஆண்டு தோறும் குறிப்பிட்ட மாதம், திதியில் நிகழும் ஆனால் தலைத்திதி உறவினர், பங்காளிகளையெல்லாம் அழைத்து, அவர்கட்கு விருந்தளித்து விரிவாக நிகழும், பின்னர் இறந்தவரின் மக்கள் மட்டும் ஆண்டுதோறும் திதி கொடுப்பர்.

## படைத்தல் :

இறந்தவருள் சிலர், அவர் தம் வழி முறையினரால் தெய்வமாக ஏற்றுக் கொள்ளப் பெறுவர். பின்னர் அத்தெய்வத்தை வழிபடுவதற்காகப் படைப்பு நிகழ்த்துவர். இது இறந்தவர் நினைவாக நடைபெறும் ஒரு சிறப்பு நிகழ்ச்சியாகும். சுமங்கலியாக, இறந்த பெண்களை வாவரசியாகப் போய்விட்டாள் என்று கூறுவர். அவருக்குப் பெரும்பாலும் படைப்பு உண்டு. அதுபோல, இறந்தவர்களுள், அந்தந்தக் குடும்பத்தின் தலைமகன்களுக்கும் படைப்பது உண்டு.



சிவமயம்

# நகரத்தார் பாரம்பரியம் – கேள்வி பதில்

இன்றைய நாகரிகத்தில் திளைக்கும் நமக்கு–நம் குழந்தைகளுக்கு நம்முடைய நாகரிகம், பாரம்பரியம் பற்றி அதிகம் தெரியவில்லை. அதைத் தெளிவு படுத்தவே இந்த வினாக்களும்– விடைகளும்

**முதல் நிலை : எளிமையான கேள்விகள்**

**கேள்வி 1 :** நகரக்கோவிலான இரணிக்கோவிலில் எழுந்தருளும் இறைவன் பெயர் என்ன ?
**விடை :** அருள்மிகு ஆட்கொண்ட நாதர்

**கேள்வி 2 :** நகரக்கோவிலான வேலங்குடி கோவிலில் அருள்பாலிக்கும் இறைவன் பெயர் என்ன ?
**விடை :** அருள்மிகு. கண்டீஸ்வரர்

**கேள்வி 3 :** எந்த நகரக்கோவிலில் அருள்பாலிக்கும் இறைவியின் பெயர் ஆவுடைநாயகி
**விடை :** சூரைக்குடி கோவில்

**கேள்வி 4 :** நகரக்கோவிலான இரணிக்கோவிலில் அருள்பாலிக்கும் இறைவியின் பெயர் என்ன ?
**விடை :** அருள்மிகு. சிவபுரந்தேவி அம்பாள்

**கேள்வி 5 :** எந்த நகரக்கோவிலில் அருள்பாலிக்கும் இறைவியின் பெயர் காமாட்சி அம்பாள்
**விடை :** வேலங்குடி

**கேள்வி 6 :** உலகில் இரண்டு கைகளுடன் காணப்படும் விநாயகர் சிற்பங்கள் இரண்டு மட்டுமே. ஒன்று ஆப்கானிஸ்தானில் உள்ளது. மற்றொன்று எங்கு காணப்படுகின்றது ?
**விடை :**பிள்ளையார்பட்டி கற்பகவிநாயகர்

**கேள்வி 7 :** தானே உண்டான உளிபடாத சுயம்புலிங்கம் உள்ள நகரக்கோவில் எது ?
**விடை :** இலுப்பைக்குடிக் கோவில்

**கேள்வி 8 :** பாரட்லா என அன்புடனும் மரியாதையுடனும் அழைக்கப்பட்ட நகரத்தார் சமூக பெருமகன் யார் ?
**விடை :** Dr. RM. அழகப்பச்செட்டியார்

**கேள்வி 9 :** நவராத்திரி தசரா பண்டிகையின் எந்த நாளை கிலுக்கியெடுப்பு என நகரத்தார்கள் கொண்டாடுவார்கள்
**விடை :** முதல் நாள்

**கேள்வி 10:** நவராத்திரி தசராவின் இறுதிநாளை எந்தப்பெயர் சொல்லி நகராத்தார்கள் கொண்டாடுவது மரபு
**விடை :**மகார் நோன்பு

**கேள்வி 11:** குழந்தைக்கவிஞர் என அன்புடன் அழைக்கப்பட்ட நகரத்தார் பெருமகனார் யார்
**விடை :** அழ. வள்ளியப்பா, இராயவரம், மாத்தூர், கண்ணூர்

**கேள்வி 12:** பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார் பிறந்த ஊர் எது?
**விடை :** மகிபாலன்பட்டி

**கேள்வி 13:** கவியரசர் கண்ணதாசன் அவர்களின் இயற்பெயர் என்ன?
**விடை :** முத்தைய்யா

**கேள்வி :** உட்பிரிவில்லாத நகரக்கோவில்கள் யாவை?
**விடை :**மொத்தம் 6 1. நேமம் கோவில் 2. இரணியூர் 3. பிள்ளையார்பட்டி 4. இலுப்பைக்குடி 5. சூரக்குடி 6. வேலங்குடி

**கேள்வி :** திரைப்பட இயக்குனர் வசந்த் அவர்களின் இயற்பெயர் என்ன?
**விடை :**சோம சின்ன வீரப்பன், தேவகோட்டை

**கேள்வி :** பூம்புகார் எனப்படும் காவிரிப்பூம்பட்டிணத்திலிருந்து புலம்பெயர்ந்த நகரத்தார் முதன்முதலாகக் குடியேறிய ஊர் எது?
**விடை :** நாட்டரசன் கோட்டை, இளையாற்றங்குடி என இருவேறு கருத்துக்கள் உண்டு (சவகர்பழநியப்பன்)

**கேள்வி :** மதுரை மீனாட்சி அம்மன் கோவிலைப் புதுப்பித்து பல சீர்திருத்தங்கள் செய்து மொட்டைக் கோபுரத்தை முழுக் கோபுரமாக்கி சொந்தச் செலவில் குடமுழுக்குச் செய்த நகரத்தார் சான்றோர் யார்?
**விடை :** வயிநாகரம், நாகப்பசெட்டியார், அமராவதி புதூர் 6.2.1878ல் செலவு 25 லட்ச ரூபாய்



**கேள்வி :** நகரத்தார் பெருந்தகை பாடுவார் முத்தப்பசெட்டியாரின் பிறந்த ஊர் எது?
**விடை :** கீழச்சிவல்பட்டி

**கேள்வி :** பிள்ளை பிறந்தவுடன் மிட்டாய்த்தட்டு வைத்து உறவினர் பங்காளிகளை வீட்டுக்கு அழைத்து உபசரித்து விருந்தோம்பல் சிறப்பு நிகழ்வு நகரத்தார் பண்பாட்டில் எவ்வாறு அழைக்கப்படுகிறது ?
**விடை :** பேறுகேட்டல் – சொல்லல் தாய் வீட்டார் பிரசவம் பார்த்து விடுவதற்கு, பேரிடுதல் என்ற பெயர்

**கேள்வி :** சூப்பிடி புதுமை எந்த மாதத்தில், எந்த பிள்ளைக்கு செய்வார்கள்
**விடை :** முதல் ஆண் பிள்ளைக்கு, கார்த்திகை மாதத்தில். இதற்கு, கார்த்திகைப் புதுமை என்று பெயர்

**கேள்வி :** திருவாதிரை எந்தப்பிள்ளைக்கு எந்த மாதத்தில் செய்வார்கள்
**விடை :** பெண் பிள்ளைக்கு மார்கழி மாதத்தில்

## இரண்டாம்நிலை

**கேள்வி :** கொப்பிகொட்டுதல் நிகழ்ச்சி ஆண்குழந்தைக்கா? பெண் குழந்தைக்கா ?
**விடை :** பெண் பிள்ளைக்கு

**கேள்வி :** கொப்பி கொட்டுதல் என்று நடைபெறும் ?
**விடை :** தைமாதம், மாட்டுப்பொங்கலன்று (பெண்குழந்தையின் இளமைக்காலம் முழுவதும் ஆண்டுதோறும்)

**கேள்வி :** சோமசுந்தரப் பெருமான் இயக்கமாதர் அறுவர் ஆகிய கார்த்திகைப் பெண்களுக்கு அருளிய 33 வது திருவிளையாடல் புராணம் நடைபெற்ற தலமாகிய நகரத்தார் ஊர்ப் பெயர் என்ன?
**விடை :** பட்ட மங்கலம்

**கேள்வி :** செஞ்சடேஸ்வரர், சௌந்தரநாயகி என்னும் பெயர்களில் மூன்றாவது லிங்கமும் அம்மனும் உள்ள கோவில் எது ?,
**விடை :** பிள்ளையார்பட்டி – திருவீசர், மருதீசர், வாடாமலர் மங்கை, சிவகாமி அம்மன்

**கேள்வி :** சேக்கிழார் விழா நடைபெறும் ஒரே நகரத்தார் ஊர் எது?
**விடை :** தேவகோட்டை

**கேள்வி :** "லெட்சுமி" ஏத்தனம் நகரத்தார்களின் எந்த நகையில் காணப்பெறும்
**விடை :** கழுத்துருவில்

**கேள்வி :** நகரத்தார் திருமணங்களில் மாப்பிள்ளைத் தோழன் என்று யாரைக் குறிப்பிடுவார்கள்?
**விடை :** வல்லுவைப்பையைச் சுமந்திருக்கும் சிறுபையன். அந்தப்பை, மஞ்சள் அல்லது சிவப்பு வெல்வெட் துணியில் தைக்கப்பட்டு மேலே கொசுவலை போன்ற துணியில்மூடப்பட்டிருக்கும். வெல்வெட் என்பதுதான் வல்லுவப்பை ஆயிற்றோ?

## மூன்றாம் நிலை

**கேள்வி :** நகரத்தார் பெண்கள் குருபீடம் எங்குள்ளது?
**விடை :** துலாவூர்

**கேள்வி :** காரைக்குடி செக்காலையின் பூர்விகப்பெயர் என்ன ?
**விடை :** ஜெயங்கொண்டபுரம் (50 ஆண்டுகளுக்கு முன் நகரத்தார் வாழும் ஊர்ப்பெயர் பட்டியல் குறிப்பிடப்படும் போது ஜெயங்கொண்டபுரம் என்ற செக்காலை என்று தனி ஊராகக்குறிப்பிடப்பட்டுள்ளது)

**கேள்வி :** 63 நாயன்மார் வரலாற்றில் நகரத்தார் இனத்தைச் சார்ந்த காரைக்காலம்மையாரின் இயற்பெயர் என்ன?
**விடை :** புனிதவதி

**கேள்வி :** பண்டு வைரவன் கோவில் நகரத்தார்களுக்குச் சொந்தமான "ஏழகப்படை" படை வீடாக தங்கியிருந்த "ஏழகப்பெருந்தெரு" என்கிற இடத்தின் தற்காலப்பெயர் என்ன?
**விடை :**கோவிலூர்– கழனிவாசல் இணைந்த பகுதி

**கேள்வி :** பெரிய மருது, சின்ன மருது, மருதுவின் தாயார் ஆகிய மூவருக்கும் தனித்தனியே அரண்மனை இருந்த நகரத்தார் ஊர் எது?
**விடை :** அரண்மனை சிறுவயல்



**கேள்வி :** "சமதர்மவிலாஸ்" என்ற பேருடைய வீட்டிலிருந்து தமிழகத் திரையுலகில் பிரபலமான நகரத்தார் யார்
**விடை :**இயக்குனர் S.P. முத்துராமன்

**கேள்வி :** "இரட்டைக்காப்பியங்கள்" என்ற சிறந்த தமிழ் ஆராய்ச்சியின் மூலம் தனது முனைவர் பட்டத்தை பெற்ற தமிழறிஞர் ஆகிய நகரத்தார் யார்
**விடை :** முனைவர் வ.சுப. மாணிக்கம் செட்டியார்

**கேள்வி :** வேந்தன்பட்டியில் புகழ்பெற்ற நெய்நந்தீசுவரர் மேலைச்சிவபுரி எந்த ஊரிலிருந்து கொண்டு வரப்பட்டது ?
**விடை :** கொடும்பாளூர் (1,தஞ்சாவூர் பெரியநந்தி 2, வேந்தன்பட்டி நந்தி)

**கேள்வி :** பர்மாவில் ரெங்கோன், அரிக்கன், இலங்கையில் கொழும்பு, கண்டி, இந்தியாவில் சட்டிகாமம் (கிட்டசாங்) கல்கத்தா, விசாகபட்டினம், காக்கிநாடா, நாகப்பட்டினம், தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை, மதுரை, திருநெல்வேலி, தூத்துக்குடி, கொச்சி, முதலிய எல்லா இடங்களிலும் அரிசி வியாபாரமும், வணிக நிலையங்களும் நடத்தி சொந்தமாக "லெட்சுமி கோவிந்தர், கெங்கா, கௌரி, பாக்கியலெட்சுமி" என 3 கப்பல்களும், பல படகுகளும் வைத்து 1906 ம் ஆண்டு ஆங்கில அரசால் தலை சிறந்த கப்பல் வணிகர்கள் இருபது பேரில் ஒருவராகப்பிரகடனம் செய்யப்பட்ட நகரத்தார் யார் ?
**விடை :**நேமத்தான்பட்டி அரிக்கன் (அக்யாப்) பழநியப்ப அய்யா

**கேள்வி :** இந்தியாவில் சிறந்த ஒலிப்பதிவாளராக நான்குமுறை தேசிய விருது பெற்றுள்ள நகரத்தார் யார் ?
**விடை :** நேமத்தான்பட்டி S.P. ராமநாதன் இரணிக்கோவில்

**கேள்வி :** 1922 முதல் காரைக்குடியிலிருந்து தமிழ் இதழிலியல் உலகிற்கு பல இதழியல் உத்திகளை வழங்கி தமிழ் இதழியலின் முன்னோடிகளாக விளங்கிய "குமரன்", "ஊழியன்" பத்திரிக்கைகளின் ஆசிரியர் யார்

**விடை :** சொ. முருகப்பா

**கேள்வி :** கவிமணி மன்றம் 40 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றி கன்னித்தமிழ் வளர்க்கும் நகரத்தார் ஊர் எது?

**விடை :** குருவிக்கொண்டான்பட்டி

**கேள்வி :** இவ்வூருக்கு கிழக்கே, மேற்கே, தெற்கே,உள்ள நகரத்தார்களின் ஊர்கள் முறையே கீழ வட்டகை, மேலவட்டகை, தெற்குவட்டகை, என்று அழைக்கப்படுகின்றன. இது எந்த ஊர் ?

**விடை :** குன்றக்குடி

**கேள்வி :** சென்னையில் இன்றைய மியூசிக் அகாடமி கட்டடமும் பரந்த இடமும் முன்னாளில் புத்தக வெளியீட்டாளர் களாகிய சக்தி காரியாலயத்திற்கு சொந்தமானது? அதன் உரிமையாளாகிய நகரத்தார் யார்?

**விடை :** இராயவரம் சக்தி. வை, கோவிந்தன் செட்டியார் (1912)

**கேள்வி :** நகரத்தார் கலியாணத்தில் எந்தப்பிள்ளை கலியாணத்திற்கு மாமவேவு செய்யப்படும்

**விடை :** மாப்பிள்ளையோ, பெண்ணோ தலைப் பிள்ளையாக இருந்தால், ஆயா வீட்டிலிருந்து வேவு இறக்குவார்கள்.



## அறிவோமா நம் சமூகத்தை

### நான்காம்நிலை

**கேள்வி :** கி.பி 400 முதல் கி.பி 1238 வரையிலான பழங்காலக் கல்வெட்டுக்கள் பிள்ளையார்பட்டிக் கோவிலில் காணப்படுகின்றன மொத்தம் எத்தனை கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன?

**விடை :** 14

**கேள்வி :** என்று முதல் பிள்ளையார்பட்டி திருக்கோயில் நகரத்தார்களுக்கு உரிமை ஆயிற்று?

**விடை :** கி.பி 1284 முதல். இதற்கான கல்வெட்டுச் சான்று, திருவீசர் கருவறைத் திருவாயிலுக்கு வலது பக்கச்சுவரில் உள்ளது.

**கேள்வி :** சென்னையில் Flying club ஐத் தொடங்கி பல விமானிகளை ஒன்று திரட்டிய நகரத்தார் யார்?

**விடை :** கானாடுகாத்தான் சா.அ.அ. அண்ணாமலை செட்டியார் (குமுதம் ஆசிரியர் எஸ்.ஏ.பி. அண்ணாமலையின் சிறிய தகப்பனார்)

**கேள்வி :** புரட்சிக்கவி, பாரதியார் பாடிய தனிமனித நகரத்தார் பெயர் என்ன

**விடை :** கானாடுகாத்தான் வை.சு.சண்முகனார்.

**கேள்வி :** "யாழ்நூல்" ஆராய்ச்சி மேற்கொண்டு, பெரும் பொருட்செலவில் விபுலானந்த அடிகள் உருவாக்கிய "சகோடயாழ்" எந்த நகரத்தார் குடும்பத்தார் வசம் உள்ளது?

**விடை :** நற்சாந்துப்பட்டி பெ.ராம.சித.சிதம்பரம் செட்டியார் குடும்பத்தார்

**கேள்வி :** நகரத்தார்களின் கழுத்துருவில் மிகுதியான எண்ணிக்கையில் காணப்படுவது 'உரு' ஆகும். இந்த 'உரு' மொத்தம் எத்தனை உருப்படிகள் கழுத்துருவில் இருக்கும்

**விடை :** பத்தொன்பது உருப்படி

**கேள்வி :** தென்னிந்தியாவில் முதன்முதலாக ஆலைத்தொழில் தொடங்கியது யார்? அவர் ஒரு நகரத்தார் பெருமகன்.
**விடை :** தேவகோட்டை பெரி. சோமசுந்தரம் செட்டியார்

**கேள்வி :** இயற்பியல் துறையில் இராமன் எஃபெக்டு என ஒரு செயல் முறையை உருவாக்கியவர் சர்.சி.வி. இராமன். அதுபோல் முன் அழுத்தம் பெற்ற கான்க்ரீட் கம்பங்களின் (pre. compresed) திறனை மதிப்பிடுவதற்கு இவர் சமன்பாடு (Equation) கண்டுபிடித்தார். அதனை இவர் பெயரால் வழங்கி பொறியியல் துறை சிறப்பித்துள்ளது. இவர் யார்
**விடை :** டாக்டர் இராம. சேது நாராயணன்

**கேள்வி :** தினமணி நாளிதழில் உங்கள் தமிழைத் தெரிந்து கொள்ளுங்கள் எனும் உன்னதத்தொடரை எழுதிய நகரத்தார் பெருமகன்யார்
**விடை :** டாக்டர் தமிழண்ணல் இயற்பெயர். இராம. பெரியகருப்பன் – நெற்குப்பை

**கேள்வி :** இளையாற்றங்குடிக் கோவிலின் உட்பிரிவுகள் 7 அவற்றின் பெயர் என்ன
**விடை :**
1. ஒக்கூருடையார்
2. பட்டினசாமியார்
3. பெரு மருதூருடையார்
4. கழனிவாசக்குடியார்
5. கிங்கிணிச் கூருடையார்
6. பேர செந்தூருடையார்
7. சிறு செந்தூருடையார்.

**கேள்வி :** மாற்றூர்க் கோவில் உட்பிரிவுகள் 7 அவற்றின் பெயர் என்ன?
**விடை :**
1. உறையூருடையார்
2. அரும்பாக் கூருடையார்
3. மணலூருடையார்
4. மண்ணூருடையார்
5. கண்ணூருடையார்
6. கருப்பூருடையார்
7. குளத்தூருடையார்



**கேள்வி :** நகரத்தார் ஆச்சிகளின் ஆளுமையை சிறப்பிக்கும் உன்னத ஆராய்ச்சி புத்தகமான–Gender, Kinship & Property Rights - Nagarathar Womanhood in South India ஐ எழுதிய அயல்நாட்டு ஆராய்ச்சியாளர் யார்
**விடை :** டாக்டர் Yuko Nishimura எனும் சப்பானியப் பெண்மணி

**கேள்வி :** நகரத்தார் திருமண சடங்குத்தட்டில் எத்தனை கிண்ணங்கள் இருக்கும்
**விடை :** 7 (1. பிள்ளையார், வெற்றிலை, பாக்கு 2. மஞ்சள் 3. விபூதி 4. பச்சரிசி 5. உப்பு 6. புளி 7. பஞ்சு ஆகியவற்றை வைக்க வேண்டும்)

**கேள்வி :** தற்பொழுது செட்டிநாட்டில் உள்ள 75 ஊர்கள் மேலவட்டகை கீழவட்டகை என்பது போல் மொத்தம் 7 பிரிவாகக் குறிப்பிடப்படுகின்றன. அப்பிரிவுகள் யாவை
**விடை :**

| | | |
|---|---|---|
| 1. | பதினெட்டூர் வட்டகை | 21 |
| 2. | மேலப்பத்தூர் | 16 |
| 3. | மேல வட்டகை | 14 |
| 4. | கீழ வட்டகை | 3 |
| 5. | தெற்கு வட்டகை | 16 |
| 6. | கீழப்பத்தூர் | 4 |
| 7. | நீண்ட கரைப்பிரிவு | 1 |
| | | 75 |

**கேள்வி :** செட்டிநாட்டு ஊர்கள் பிரிக்கப்பட்டுள்ள 7 பிரிவுகளில் உள்ள நீண்ட கரைப்பிரிவில் உள்ள ஒரே ஊர் எது?
**விடை :** கோனாபட்டு

**கேள்வி :** ஒரு நூற்றாண்டு காலத்திற்கும் முன்பாகவே சைவமும், தமிழும் தழைத்து இனிது ஓங்கிட சன்மார்க்க சபை நிறுவிய குடும்பம் எது? ஊர் எது?
**விடை :** வ.பழ.சா. குடும்பத்தினர்,
ஊர். மேலைச்சிவபுரி, தொடங்கிய ஆண்டு : 1909

## நாட்டுக்கோட்டை நகரத்தார்
## திருமண நடைமுறை விளக்கம்

நாட்டுக்கோட்டை நகரத்தார்கள், நாடுகள் பலசென்று வணிகத்தில் ஈடுபட்டாலும், தம்முடைய மரபியல்புகளை விட்டுவிடாமல், தொடர்ந்து பின்பற்றுபவர்கள். நகரத்தார் திருமண நடைமுறைகள் தொன்று தொட்டுத் தொடர்ந்து வருபவை, அர்த்தமுள்ளவை. சில சடங்குகள் நடைமுறைக்கு ஏற்றவையாக இல்லாவிட்டாலும், விடாப்பிடியாக மரபு மாறாமல் நடத்தப்படுபவை. திருமணம் என்பது எல்லோருடைய வாழ்க்கையிலும் முக்கியப்பங்கு வகித்தாலும், நகரத்தார்களுக்கு மிகச் சிறப்பான ஒரு விழா. ஆண்டுகள் பல சேமித்த செல்வத்தை, ஒரே நாளில் ஆடம்பரமாகச் செலவு செய்யும் ஒரு விழா. முன்பு ஏழுநாள் திருமணம், பின்பு மூன்று நாள், தற்போது ஒரு நாள் திருமணமாக மாறிவிட்டது.

நகரத்தார்களை ஏனைய செட்டியார்களில் இருந்து வேறுபடுத்திக் காண்பிப்பது, அவர்கள் சார்ந்துள்ள கோயிற்பிரிவுகளேயாகும். மொத்தம் ஒன்பது கோயில் பிரிவுகள் அதில் இளையாத்தங்குடியில்– ஏழு உட்பிரிவுகள்

மாத்தூரில் – ஏழு உட்பிரிவுகள் இவற்றோடு மற்ற கோயில்கள் – ஏழு

ஆக 21 பிரிவுகள் இப்பிரிவினர் தமது பிரிவினருக்குள் திருமணம் செய்து கொள்வதில்லை. பிள்ளையார்பட்டிக் கோவிலாரும், இரணிக்கோயிலாரும், அண்ணன், தம்பி முறை என்பதால், அவர்களுக்குள் திருமணம் செய்து கொள்வதில்லை. ஆனால் சுவீகாரமும் செய்து கொள்வதில்லை. அது ஏன் என்றும் தெரியவில்லை.

நகரத்தார் திருமணம், பெற்றோர் முன் நின்று, நடத்திவைப்பது. பெண்வீட்டார், மாப்பிள்ளை வீட்டாரைத் தேடிச் சென்று மாப்பிள்ளை கேட்க இருவீட்டாரும் ஒருவரைப் பற்றி மற்றவர் விசாரித்து அறிந்து, கொடுக்கல் வாங்கல் முடிவு செய்து, உற்றார் உறவினர் முன் நடைபெறுவது நகரத்தார் திருமணம்.



## நகரத்தார் திருமண முறைகள் :–

கோலமிட்ட மணவறையில்
குங்குமத்தின் சங்கமத்தில்
மாலையிட்ட பூங்கழுத்தில்
தாலி கட்டும் வேளையில்

நகரத்தார் பெருமக்கள் போற்றிப் பாதுகாத்து நாளும் இயன்றவரை நம் மரபு மாறாமல், இன்றளவும் இல்லத் திருமணங்களில் பின்பற்றும் திருமண நடைமுறைகளைப் பற்றி தெரிந்து கொள்வோமாக.

**நிச்சயதார்த்தம் :–**

நல்லநாளில் பெண்வீட்டாரும், மாப்பிள்ளை வீட்டாரும், குறிப்பிட்ட இடத்தில் கூடி, சீர்முறைகளைப் பேசி எழுதிக் கொண்டு, மஞ்சள் தடவி, தாம்பூலத் தாம்பாளத்தில் வைத்து இருவீட்டாரும் அந்த விவரங்களைப் பெற்றுக் கொள்வர். இவ்வாறு நிச்சயம் செய்து கொள்ளும் நாளில், மாப்பிள்ளை வீட்டார் தேங்காய், பழம், மலர் கொண்டு வருவார்கள். பின்னர், திருமணம் செய்வதற்கான நாள், திருப்பூட்டும் நேரம், மாப்பிள்ளை அழைப்பு, பெண் அழைப்புக்கான நேரம் இவற்றைக் குறித்துக் கொள்வர்.

**திருமண அழைப்பிதழ் :–**

இரு வீட்டாரும் தனித்தனியே திருமண அழைப்பிதழ் அச்சடிப்பார்கள். அதில் அவரவர் வீட்டுப் பெரியவரை வைத்து மணமகன் அல்லது மணமகள் உறவைச் சொல்லித்தான் அழைப்பிதழ் அடிப்பார்கள், கூடிக் கொள்ளும் உறவினர்கட்கு அழைப்பிதழுக்குப் பதிலாகக் கடிதம் எழுதி அனுப்பி அழைப்பார்கள்.

**முகூர்த்தக்கால் ஊன்றுதல் :–**

குறிப்பிட்ட நல்ல நாளில் கொட்டகைக்காரர் வந்து வீட்டின் வாசலில் ஈசானிய முலையில் (வடகிழக்கு மூலை) மஞ்சள் குங்குமம் தடவிய ஒரு மூங்கில் கம்பின் முனையில் மாவிலைகட்டி ஊன்றி வைப்பார். அதற்குத் தேங்காய் உடைத்து கற்பூரத்தீபம் காட்டுவார். இது இருவீட்டிலும் நடைபெற வேண்டிய நிகழ்ச்சி, தட்சணை கொடுக்க வேண்டும்.

**சுவாமிக்கு பணம் முடிவது :-**

அவரவர் குல தெய்வங்களுக்கும், பழக்கப்படி பணம் எடுத்து முடியும் சாமிகளுக்கும் பணம் எடுத்து முடிய வேண்டியது. படைக்கும் பழக்கம் உள்ளவர்கள் அவரவர் வீட்டுப் பழக்கப்படி படைக்க வேண்டியது.

**கல்யாணம் சொல்லுதல் :-**

இரண்டு தேங்காய், வெற்றிலை, பாக்கு இவற்றை ரப்பர் வாளியில் வைத்து முதலில் அவரவர் ஆயாள் வீட்டில் சொல்லியபிறகு மற்ற உறவினர் வீடுகளில் சொல்லி வருவார்கள், ஒரு சில வீடுகளில் ஆயாள் வீட்டிற்குப் பதிலாகப் பெரிய வீட்டில் சொல்வதும் உண்டு.

**கோவிலில் பாக்கு வைத்தல் :-**

திருமணத்திற்கு சரியாக மூன்று நாட்களுக்கு முன்னர் இருவீட்டாரும் அவரவர்கள் சார்ந்துள்ள கோவிலுக்குத் தங்கள் பங்காளி ஒருவரை அனுப்பி மணமகள் / மணமகன் கோயில், பிரிவு ஊர், முகவரி, திருமணம் நடைபெறும் நாள், நேரம், இடம் முதலிய விவரங்களைக் கோயில் பதிவேட்டில் பதிந்து அதற்குரிய காணிக்கையைச் செலுத்தி வரவேண்டும். இதற்குத் திருமண அழைப்பிதழும் வெற்றிலை பாக்கும் கொண்டு செல்ல வேண்டும். (உதாரணமாக புதன்கிழமை திருமணம் எனில், ஞாயிறு அன்று பாக்குவைத்தல் வேண்டும்) (குறிப்பாக இரணிக்கோவில், பிள்ளையார்பட்டிக் கோவில்காரர்கள் இளையாற்றங்குடிக் கோவிலுக்கும் பாக்குவைக்க வேண்டும்).

**முளைப்பாலிகை தயார் செய்தல் :-**

திருமணத்திற்கு மூன்று நாட்களுக்கு முன்னர் மணமகன் வீட்டில், முளைக்கும் திறனுள்ள நெல், உளுந்து, கடலை, கொள்ளு, எள், சாமை, தினை, துவரை, பாசிப்பயறு ஆகிய ஒன்பது வகைத் தானியங்களைக் கலந்து இளம் சுடுநீரில் ஊறவைத்து, திருமணத்திற்கு முதல் நாளிரவு அதனைச் சிகப்புத்துணியில் கட்டி ஒரு பாத்திரத்தில் வைத்து, திருமண நாளன்று மணமகள் வீட்டிற்கு எடுத்துச் செல்ல வேண்டும்.



**கோட்டை நெல் கட்டுதல் :-**

ஒரு மரக்கால் நெல்லை (பெ.படி2) ஒரு துணிப்பையில் கட்டி, வைக்கோல்பிரியில் சுற்றிக்கட்டிய நெற்கொடையைத் திருமண நாளன்று மணமகள் வீட்டுக்குக் கொண்டு செல்ல வேண்டும்.

**கூடி ஆக்கி உண்ணுதல் :-**

திருமணத்திற்கு முதல் நாள் உறவினர்கள் எல்லோரும் கூடி, ஆக்கி உண்ணும் நிகழ்ச்சி இது. நம்மில் பெரும்பாலோர் படைப்பு என்று நம் முன்னோரை வழிபடுகின்ற நாளாக இதனை அமைத்துள்ளனர். இன்றைய நடைமுறையில் கூடி ஆக்கி உண்ணும் நிகழ்ச்சியைச் சிலர் மட்டுமே பின்பற்றி வருகிறார்கள்.

**திருவிளக்கு ஏற்றுதல் :-**

அப்பத்தாள் அல்லது அத்தையை அழைத்து நடுவீட்டில் விளக்கு ஏற்றச்சொல்லல் வேண்டும்.

**கொழுமேளம் :-**

மேளகாரர்கள் வந்ததும், சங்கு ஊதி நல்ல காரியத்தைக் கொழு மேளத்தை வாசிக்கச் செய்ய வேண்டும்.

**மனைக்கு மண் எடுத்தல் :-**

பெண் வீட்டார் தம் உறவினர்களை அழைத்துக் கொண்டு ஊரில் வழக்கமாக மண் எடுத்து வரும் ஊருணிக்குச் சங்கு ஊதிக் கொண்டு சென்று அந்தக் குளத்து மண்ணைப் பெண்கள் எல்லோரும் எடுத்து வந்து வளவு வீட்டின் முன் ஐந்து செங்கற்களின் மேல் வைத்து சங்கு ஊதி அதன் மேல் மனையை எடுத்து வைக்க வேண்டும்.

**கோவில் மாலைகள் வாங்குதல் :-**

இரு வீட்டாரின் கோயில்களிலிருந்தும் வயிராவி மாலை கொண்டு வரும்போது, விளக்கேற்றி சங்கு ஊதி, மாலையை வாங்கி, நடு வீட்டிற்குள் வைக்க வேண்டும்.

**மிஞ்சி அணிவித்தல் :-**

மாப்பிள்ளை வீட்டார் ஆசாரியை வரச்சொல்லி மாப்பிள்ளைக்கு மிஞ்சி அணிவிப்பார்கள்.

## தும்பு பிடித்துக் கோலமிடல் :–

இருவீட்டாரும், வளவுப் பங்காளி வீட்டுப் பெண்களை வைத்து, திருமணம் நிகழ்கின்ற அறையின் வெளிச்சுவற்றிலும் உள்வீட்டுச் சுவற்றிலும் கதவிலும் ஏட்டுக்கயிறு கொண்டு தும்பு பிடிக்க வேண்டும். மேல வட்டகையில் அத்தை அம்மாள் பெண்டிர் ஆகியோர் தும்பு பிடிப்பார்கள்.

## மாற்றுக் கட்டுதல் :–

நீல நிறம் அல்லது பிறநிற மாற்றினை சலவைத் தொழிலாளியைக் கொண்டுவரச் சொல்லி மணமேடைக்கு மேலே உள்ள விட்டத்தில் கட்டச் சொல்லவேண்டும். (மணமக்கள் மீது பல்லியோ, பூச்சியோ விழுந்துவிடாமல் பாதுகாப்பதற்காக)

## அரசன் ஆணைக்கால் கட்டுதல் :–

பெண் வீட்டில் மனைக்கு எதிரில் கோலமிட்ட இடத்தில் பங்காளிகளைக் கொண்டு மணலை நிரப்பி, அதில் பாலை மற்றும் அரசாணி மேடையில் கிளுவைக் குச்சியை ஒரு மூங்கில் கம்புடன் இணைத்து ஊன்றி, பால் ஊற்றிப் பவழமும் (பின்னர் எடுப்பதற்கு ஏதுவாக) வைத்து, கிளுவைக் குச்சியைச் சுற்றி அரச இலை, மாவிலைகளைக் கொண்டு கீழிருந்து மேலாகக் கயிறு கொண்டு கட்ட வேண்டும். தேவைப்பட்டால் பிடிதரத்திற்காக உயரத்தில் குறுக்குக் கம்பு சேர்த்துக் கட்டிக் கொள்ளலாம். உயரம் குறைந்த ஸ்டூலில் சரவிளக்கை வைத்து நல்லெண்ணை தீபமிட வேண்டும்.

## கழுத்துரு வாங்கி வந்து கோர்த்தல்:–

வள்ளுவப் பையில் வெற்றிலை, பாக்கு, விரலி மஞ்சள், எழுத்தானி, குலம் வாழும்பிள்ளை, சிவப்பு டவல் ஆகியவற்றை வைத்து பங்காளிகள் இருவர் திருமணத்துக்கு முதல் நாள் பெண் வீட்டிற்கு சென்று, கழுத்து உரு உருப்படிகள் 31ம் குச்சி, தும்பு, துவாளை உருப்படி 3–ம் பிள்ளைத் தும்பு 1–ம் சிறுதாலிச் சோடிப்பையும் வாங்கி, சிகப்புத்துண்டில் முடிந்து வள்ளுவப்பையில் வைத்து வாங்கி வரவேண்டும்.

பின்னர் பங்காளிகள் இரு பெரியவர்கள் கண் மார்க நூல் கண்டில் 21 பாகம் எடுத்து. அதை முப்பிரியாக வரும்படி பின்னி, திரித்து நன்றாக முறுக்கி, மஞ்சள் தடவி 7 பாகமாகக் கிடைத்த சரடை இரண்டாக மடித்து, படத்தில் கண்டுள்ளபடி உருப்படி 31யும்,



திருமாங்கல்யமுள்ள மேல் பாகத்தில் 16 உருப்படிகளும் லெட்சுமி ஏத்தானமுள்ள கீழ் பாகத்தில் 15 உருப்படிகளும் வரிசைப்படி கோர்த்து பின் இரண்டையும் இருமுனைகளிலும் உருவிவராதபடி முடிச்சு போட வேண்டும். பெண்ணழைத்த வீட்டிலோ அல்லது ஐந்து மாதத்தில் மருந்து குடிக்கும் நாளிலோ குச்சி, தும்பி, துவாளை மூன்றையும் கழுத்துருவில் சேர்த்துக்கட்டி, கழுத்தில் அணிந்து கொண்டு சாமி கும்பிட்ட பின் கழற்றி வைக்க வேண்டும்.

## பிள்ளைச் சரடு இழைதல் :–

அதைப்போல் 7 பாகம் நூல் எடுத்து 3–ல் ஒரு பங்காகப்பின்னி மஞ்சள் தடவி அதில் ஒற்றைத்தும்பை கோர்த்து வைத்துக் கொள்ளவேண்டும்.

## திருமணத்தன்று பெண் வீட்டில் :–

## பூரம் கழித்தல் :–

திருமணத்தன்று அதிகாலையில் பெண்ணுக்குப் பூரங்கழிக்க ஔவச்சியரைக் கூட்டி வரச்சொல்லி பெண்ணுக்கு அம்மான் மனைவி உடனிருக்க பூரம் கழிக்கச் சொல்லிப் பின்னரே பெண் குளிக்க வேண்டும். வேப்பிலையைப் பெண்ணின் தலை, தோள் பட்டைகள், இடுப்பில் இரண்டு பக்கங்கள், இருபாதங்கள் ஆகிய ஏழு இடங்களில் வைத்து இரும்புச் சத்தகம் அல்லது சோத்து மாறினால் தட்டி விடுவார்கள். பெண்ணின் அம்மான் மனைவி தான்பூரம் கழிப்பார்கள். பெண், பூரம் கழித்த பிறகு மீண்டும் குளிக்க வேண்டும்.

## கழுத்துருவுக்குப் பொன் கொடுத்தல் :–

திருமணத்தன்றே குறிப்பிட்ட நேரத்தில் மாப்பிள்ளை வீட்டிலிருந்து பங்காளிகள் இருவர் வெள்ளி அல்லது எவர்சில்வர் டப்பிகளில் பொன், சந்தனம் குங்குமம், மலர், கற்கண்டு, மஞ்சள், வெற்றிலை, பாக்கு, தேங்காய், பழ வகைகளுடன் பெண் வீட்டிற்குச் சென்று அங்கு உறவினர் பங்காளிகள் முன்னிலையில் பொற்கொல்லர் ஒருவர் வந்து பொன்னை வாங்கி தட்டிக் கொடுப்பதை, பெண் வீட்டார் வாங்கி கல்யாண (நடு) வீட்டில் வைக்க வேண்டும். பின்னர் அந்தப் பொற்கொல்லருக்குத் தகுந்த மரியாதைகள் செய்து அனுப்ப வேண்டும். தட்டிய பொற்தட்டை, சில பகுதிகளில் கழுத்துருவில் செருகி விடுவார்கள். சில பகுதிகளில் பெண் வீட்டார் வைத்துக் கொள்வார்கள். தங்கம் தட்டிக் கொடுப்பது என்றும் சொல் வழக்கு உள்ளது.

**மாப்பிள்ளை அழைத்தல் :–**

மாப்பிள்ளையின் தகப்பனார் அல்லது வீட்டிற்குப் பெரியவர்கள் திருப்பூட்டுந் தாம்பாளத்துடனும், சகோதரர் அல்லது பங்காளிகள், தேங்காய்ச் சட்டியுடனும் மாப்பிள்ளையின் தாயார், சடங்குத் தட்டுடனும், சகோதரி பாற்பானையுடனும் (வெள்ளி–கெண்டிச்செம்பு) மாப்பிள்ளையை அழைத்துக் கொண்டு சென்று, மாப்பிள்ளையின் மாமக்காரர், தாயார், சகோதரி ஆகியோருடன் காரில் பெண் வீட்டாரின் ஊருக்குச் செல்வர். மாப்பிள்ளை அழைப்புக்கென்றே கட்டப்பட்டிருக்கும் மடத்திற்கோ அல்லது கோயிலுக்கோ மாப்பிள்ளை வந்து சேர்ந்ததும் வந்த செய்தியைத் தெரிவிக்குமுகத்தான் வேட்டுப்போடுவதற்கு ஏற்பாடு செய்திருப்பார்கள். அதன்படி மாப்பிள்ளை வந்த செய்தியறிந்து பெண்வீட்டாரின் முக்கியமானவர்கள் அவர்களை வரவேற்கச் சென்று பின்னர் அவருக்கும் உடன் வந்திருப்பவர்கட்கும் காலைப் பலகாரம் கொடுத்தனுப்புவார்கள்.

**மாப்பிள்ளை கோவிலுக்கு சென்று வருதல் :–**

மாப்பிள்ளை அழைப்புக்குமுன்போ பின்போ அவ்வூரில் உள்ள பிள்ளையார் கோவிலுக்குச் சென்று அர்ச்சனை செய்து வழிபட்டு வருதல் வேண்டும். மாப்பிள்ளை அழைக்குமிடம், கோவிலில் சுவாமி தெரிசனம், அர்சனைக்கு பெண்வீட்டார் ஏற்பாடு செய்யவேணும். மாப்பிள்ளை, குதிரையில் கோயிலுக்குச் செல்லுதலும் ஊர்ப்பாக்கு வைத்தலும் முன்பு நடைமுறையில் இருந்தது.

**மாப்பிள்ளை அழைப்பு :–**

பெண்வீட்டார் தங்கள் வீட்டுப் பெரியவர்களிடம் மாப்பிள்ளை அழைப்பதற்கு எடுத்து வைத்த சாமான்கள் அடங்கிய தாம்பாளத்தைக் கொடுத்து, எடுத்து வரச்சொல்லிப் பெண்டுகள் உடன்வர மாப்பிள்ளை வந்து, இருக்கும் இடத்திற்கு விபூதி, தாம்பாளம் மேளதாளத்துடன் வரவேண்டும்.

அங்கு பங்காளியில் பெரியவர் மாப்பிள்ளைக்கு விபூதி பூசி, மோதிரம், செயின், கடிகாரம், போட்டுவிட வேண்டும். பூமாலை போட்டு, ஜரிகை வேஷ்டியை மாலைக்குத் கீழே செருக வேண்டும், பின்னர் எலுமிச்சம் பழத்தைக் கையில் கொடுத்து பூச்செண்டும் கொடுத்து மாப்பிள்ளையை அழைத்துக் கொண்டு வரவேண்டும். அப்போது மாப்பிள்ளையின் தகப்பனார் பெண்ணுக்கு உள்ள சேலை, திருப்பூட்டு



மாலை, கழுத்து உரு, சிறுதாலி, கோயில் மாலைகள் முதலியவைகள் உள்ள தாம்பாளத்தை எடுத்து வரவேண்டும், சகோதரர் அல்லது பங்காளிகளில் ஒருவர் தேங்காய் சட்டியை எடுத்து வரவேண்டும்.

**விளக்கு வைப்பது :–**

மாப்பிள்ளையை அழைத்து பெண் வீட்டிற்குள் கூட்டி வரும்போது நடுப்பத்திக் கோலத்தின் முன் நிற்க வைத்து பெண்ணின் அப்பத்தாள் அல்லது அத்தை வந்து ஆலத்தி எடுத்து விபூதி பூசி, மாப்பிள்ளையை நடுவாசலில் கிழக்கு முகமாக உட்கார வைப்பார்கள்.

**பகவத்த்யானமும், காப்புக்கட்டுதலும் :–**

மாப்பிள்ளை அழைத்து வந்ததும், முதலில் மாப்பிள்ளைக்கும் பிறகு பெண்ணுக்கும், புரோகிதரைக் கொண்டு பகவத்தியானம் செய்விக்க வேண்டும். அதுசமயம் அவரவர் மாமக்காரர் கொண்டு, வலது மணிக்கட்டில் 0–25 பைசா காசை சிகப்பு ரிப்பனில் முடிந்து முனை முறியாத விரலி மஞ்சளையும் சேர்த்து காப்பு கட்டுதல் வேண்டும். அதன் பின்னர் முதலில் மாமக்காரர், அடுத்து உறவினர் பூமணம் இடல் வேண்டும். மாப்பிள்ளைக்குப் பகவத்யானத்தின் போது தலைச்சீலையில் பணம் முடிவர்.

இங்ஙனம் இருவருக்கும் காப்புக் கட்டி முடிந்ததும் திருமாங்கல்யத்துக்குப் புரோகிதர் பூஜை செய்து தருவார், அதை நடுவீட்டில் கொண்டு போய் வைக்க வேண்டும்.

**திருப்பூட்டுதலுக்கு ஆசீர்வாதம் வாங்குதல் :–**

பெண் வீட்டு மாமக்காரர் திருப்பூட்டுதற்குரிய மங்களப் பொருள்களுள்ள தாம்பாளத்தை நடு வீட்டிலிருந்து எடுத்து வந்து, வருகை தந்திருக்கும் எல்லோரிடமும் காட்டி வாழ்த்துப் பெறுதல் வேண்டும்.

**திருப்பூட்டுதல் :–**

மாப்பிள்ளை வீட்டார் கொண்டு வந்த திருப்பூட்டுச் சேலை முதலியவற்றை அணிவித்துக் கொண்டு பெண்ணின் மாமக்காரர் பெண்ணைக் கூட்டி வந்து மனையின் மேல் அரசு ஆணைக்காலை நோக்கி நிற்கச் செய்ய வேண்டும். பிறகு மாப்பிள்ளையின் மாமக்காரர் மாப்பிள்ளையைக் கூட்டிவந்து பெண்ணுக்கு எதிரில் தடுக்கின் மேல்நிற்கச் செய்ய வேண்டும். பெண்ணின் கையில் தேங்காய்

வெற்றிலை, பாக்கு, மஞ்சள், பச்சரிசி ஆகியவற்றைக் கொடுக்க வேண்டும். பெண் இரண்டு கையிலும், அவற்றை (தேங்காய்) மாப்பிள்ளையை நோக்கி இருக்கிறார் போல் வைத்துக் கொள்ள வேண்டும். முதலில் மாப்பிள்ளை, கோயில் விபூதியைத்; 'தான்' பூசிக்கொண்டு பிறகு பெண்ணுக்குப் பூசவேண்டும், பிறகு கோவில் மாலையை எடுத்து பெண்ணுக்கு அணிவித்த பின் கழுத்துருவை நிதானமாக எடுத்து பெண்ணுக்கு அணிவித்து மூன்று முடிச்சு போட வேண்டும். பிறகு சிறுதாலியை அணிவிக்க வேண்டும் அதன்பின் திருமாங்கல்யத்திலும் கழுத்துருவின் மூன்று முடிச்சுகளிலும் சிறுதாலியிலும் மஞ்சள் தொட்டு வைத்து குங்குமம் வைக்க வேண்டும். இது சமயம் பெண்ணுக்கு நாத்தினார் பெண்ணுக்குப் பின்னிருந்து உதவி செய்தல் வேண்டும்

பெண்ணின் கையில் உள்ள பச்சரிசி தேங்காய் முதலியவற்றை தாம்பாளத்தில் வைக்கச்சொல்லி விட்டு, மூன்று முறை மாலை மாற்றிக்கொள்ள வேண்டும். முதலில் மாப்பிள்ளைதான் மாலையிடவேண்டும். மணமக்கள் ஒருவருக்கொருவர் மிட்டாய் பரிமாறிக்கொள்ள வேண்டும்.

திருப்பூட்டி முடிந்ததும், மணமக்கள், மாமக்காரருடன் வளவு, முகப்பிலுள்ளவர்களிடம் போய் வணங்கி ஆசிர்வாதம் பெற வேண்டும்.

திருப்பூட்டுதலின்போதும், மாலை மாற்றும்போதும், கெட்டிமேளம் வாசிக்கச் சொல்ல வேணும். அப்போது அனைவருக்கும் ரொட்டி, மிட்டாய், சர்பத் கொடுக்கவேண்டும்.

### இசைவுப் பிடிமானம் எழுதுதல் :-

இசைவுப் பிடிமான வாசகங்கள் தற்போது அச்சிடப்பட்டு தயாராகக் கிடைக்கின்றன. இதில் தனித்தனியே இருதரப்பாரும் அவரவர்கள் கோயில்கள் பிரிவுகள் விவரத்தினைப் பங்காளியைக் கூப்பிட்டு நிரப்பி, மணமக்களின் தந்தைமார்கள் இருவரும் நடுவீட்டில் அமர்ந்து கையெழுத்துச் செய்து, மாப்பிள்ளை வீட்டார் எழுதியது பெண் வீட்டிலும், பெண் வீட்டார் எழுதியது மாப்பிள்ளை வீட்டிலும் இருக்கும்படியாக மாற்றி பெற்றுக்கொண்டு வைத்துக்கொள்ள வேண்டியது.இதில் எழுதிய பங்காளிகளும் கையொப்பம் இடவேண்டியது. சில பகுதிகளில் மணமேடையில் அமர்ந்து கையெழுத்திட்டு படிக்கப்படுகிறது.



### திருப்பூட்டுச் சடங்கு :-

பெண்ணை மணை மீது, அரசாணிக்காலுக்கு எதிரில் நிற்கச் செய்து பெண்ணின் மாமியார் அல்லது நாத்தனார் பெண்ணுக்கு எதிரில் தடுக்கில் நின்று கொண்டு சடங்குத் தட்டைக் கொண்டுவரச்சொல்லி சடங்குத் தட்டில் உள்ள விபூதியை சடங்கு செய்பவர் தன் நெற்றியிலும், கழுத்திலும் பூசிக் கொண்டு பெண்ணிற்கும் அதேபோல் பூசிவிட வேண்டும்.

சடங்குத் தட்டில் உள்ள "நெல், மஞ்சள், பஞ்சு உப்பு, புளி" ஆகிய ஐந்தையும் ஒவ்வொன்றாக மும்முறை தொட்டுச் சடங்கு செய்பவர்கள் தன் கழுத்திலும் பின்னர் பெண் கழுத்திலும் தொட்டுச் சடங்கு செய்ய வேண்டும்.

பின்னர் பெண்ணின் கையில் ஒரு வெற்றிலையைக் கொடுத்து இரு கைகளிலுமாக வைத்துக் கொள்ளச் சொல்லி சடங்கு செய்பவர் கையில் நிறைநாழியை வைத்துக் கொண்டு வலது கையினால் கெண்டிச் செம்பிலுள்ள தண்ணீரைப் பெண்ணின் கையில் உள்ள வெற்றிலையில் ஊற்றவும், பெண் வெற்றிலையில் விழும் தண்ணீரைத் தன் பாதத்தின் கட்டை விரலில் ஊற்றிக் கொண்டு வெற்றிலை நுனியைத் தன் நெற்றியில் ஒற்றிக்கொள்ளுதல் வேண்டும். இது போன்று 3முறை செய்தல் வேண்டும். இது முடிந்ததும் நிறை நாழியைப் பெண் தலையைச் சுற்றிக் கொடுத்து உள்ளே வைக்க வேண்டியது.

பின்பு சடங்கு செய்பவர் சிலேட்டு விளக்கை இடது கையில் பிடித்துக் கொண்டு பெண்ணின் கையிலிருக்கும் வெற்றிலையில் வலது கையினால் கெண்டிச் செம்பிலுள்ள தண்ணீரை மூன்று முறை ஊற்றி மேலே கண்டபடி செய்ய வேணும். சிலேட்டு விளக்கைத் தலையைச் சுற்றாமல் கொண்டுபோய் வைக்க வேண்டும்.

பின்பு சடங்கு செய்பவர் சடங்குக் குழவியை இடது கையில் பிடித்துக் கொண்டு வலது கையினால் கெண்டிச் செம்பிலுள்ள தண்ணீரை பெண்ணின் கையிலுள்ள வெற்றிலையில் மூன்று முறை ஊற்றி மேலே கண்டவாறு செய்யவேண்டும்.

### மணவறை :-

இரு மாமக்காரர்களும் மணமக்களை அழைத்து வந்து பெண்ணை மனையில் இடதுபுறமும், மாப்பிள்ளையை வலது புறமும்,

அரசு ஆணைக்காலை நோக்கி அமரச் செய்ய வேண்டும். பஞ்சாங்கக்காரர் விநாயகர் பூஜை, வர்ண கும்ப பூஜை செய்து அக்கினி வளர்த்து ஹோமம் செய்த பின் இரு வீட்டாருடைய மாமக்காரர்கள், உறவினர்கள், பங்காளிகள் ஒவ்வாருவராக வந்து முளைப்பாரியில் நவதானியம் போட்டு, பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும், பூமணம் இடவும் வேண்டும். பிறகு பெண்ணின் சகோதரர் மாப்பிள்ளைக்கும், மாப்பிள்ளையின் சகோதரர் பெண்ணிற்கும் வாழைப்பழம் தடவுவார்கள்.

பிறகு, மாப்பிள்ளை தலையில் எண்ணெய் சீயக்காய் தண்ணீர் முதலியவற்றைப் பெண்ணும், பெண்ணின் தலையில் மாப்பிள்ளையும் மாவிலையால் தொட்டு வைக்க வேண்டும்.

பின்னர், மாப்பிள்ளை எதிரில் ஒரு முக்காலி வைத்து அதன்மீது ஒரு சட்டியை வைத்து அதில் சோறு, பருப்பு, நெய், வாழைப்பழம் முதலியவற்றைப் பரிமாறியபின் மாப்பிள்ளை அதைச் சுவைத்துப் பார்க்க வேண்டும். பிறகு மாப்பிள்ளை கை அலம்புவதற்கு பெண் நீர் ஊற்ற வேண்டும்.

பிறகு, மாமக்காரர்கள் இருவரும் மணமக்கள் தலைகளில் கொண்டைமாலைகளை மூன்று முறை மாற்றி மாற்றி வைப்பார்கள்.

பின்னர் பெண்ணின் தந்தை அவரவர் வழக்கம்போல் ஒரு தொகையை மாப்பிள்ளையின் தலையில் வைக்க அதனை எடுத்து மாமக்காரர் மாப்பிள்ளையின் தந்தையிடம் கொடுக்க பின்னர் இந்த தொகை பெண்ணுக்குக் கொடுக்கும் ஸ்ரீ தனப் பணத்துடன் சேர்த்துக் கொள்ளப் பெறும். இதுவே தலைச் சீலையில் முடிதல் என்பது.

பிறகு மணமக்கள் முன் உள்ள முக்காலி மீது உள்ள சட்டியில் அரிசி, மஞ்சள் தேங்காய் இவற்றை வைத்து மாமப்பட்டினால் இரு மாமக்காரர்களும் மூடினாற் போல் பிடித்திருக்க மணமக்கள் இருவரும் அதை எடுத்து மூன்று முறை மாற்றிக் கொள்ள வேண்டும்.

மாமப்பட்டினால் அச்சட்டியினை மூடிய நிலையிலேயே மணமக்கள் இருவரும் எழுந்து அரசாணிக் காலையும் அக்கினியையும் சுற்றி வலம் வந்து மாமக்காரர்களுடன் நடு வீட்டிற்குள் அழைத்துச் செல்லும்போது நெல் கோட்டையை வைத்துத் தாண்டி உள்ளே சென்று அமர வேண்டும். பிறகு மாமக்காரர் அந்த மாமப்பட்டு துணியை



விலக்கியபிறகு அந்தப் பொருள்களை அங்கு வைத்துவிட்டு எழுந்து வெளியே வர வேண்டும்.

## வேவு எடுத்தல் :-

தலைப்பிள்ளைக்கு மட்டும் முதலில் மாம வேவு எடுத்தல் வேண்டும் அதற்கு பெண் வீட்டார் தயாரித்துள்ள பச்சரிசி இலைக்கட்டு, பரங்கிக்காய், வாழைப்பழம், கற்கண்டு, மஞ்சள் பழங்கள் முதலியவற்றைப் பணியாட்கள் தலைமேல் வைத்து பெண்ணுக்கு ஆயாள் வீட்டு பங்காளிகள் எல்லோரும் மேளதாளத்துடன் கொண்டு வருவார்கள் பெண் வீட்டு முகப்புப் பத்தியில் கோலத்திற்கு முன்பாக அவர்களை நிற்க்க செய்து பெண்ணின் அப்பத்தாள் குத்துவிளக்கு வைத்த பின் தாய் மாமன் வீட்டு ஆண்கள் தலையில் புழுங்கலரிசி படி.2 தேங்காய் 2. கத்தரிக்காய் 2 கொண்ட வேவுக்கடகத்தைத் தலையல் வைத்துக் கொள்ள, முதலில் பெண்ணும், பிறகு அவள் குடும்பத்தை சார்ந்த பெண்களும் ஒவ்வெருவராக வந்து 5,7,9 என்ற ஒற்றப்படை எண்ணிக்கையில் இறக்கி நடுவீட்டில் கொண்டு போய் வைத்துவிட வேண்டும்.

மாப்பிள்ளை தலைப்பிள்ளையாக இருந்தால் மாப்பிள்ளையின் ஆயாள் வீட்டாரும் இந்த வேவு எடுத்தல் வேண்டும். ஆயாள் வீட்டு ஆண்கள் தலையிலிருந்து மாப்பிள்ளை வீட்டு பெண்கள் இறக்க வேணும்.

பிறகு பெண் வீட்டார் கல்யாண வேவு எடுத்தல் வேண்டும். கல்யாண வேவின் போது பெண் வீட்டு ஆண்களான பெண்ணின் தந்தை, பெண்ணின் பெரியப்பா, சிற்றப்பா பெண்ணின் அண்ணன் தம்பிகள் பெண்ணின் அண்ணன் தம்பி மகன்கள், பெண்ணின் அய்யாக்கள் வீட்டுப் பங்காளிகள் கூடிக்கிற பங்காளிகள், பெரும் பங்காளிகள் ஆகியோர் தலையில் வேவுகடகத்தை வைத்துக் கொள்ள மாப்பிள்ளை வீட்டு பெண்களான கல்யாணப் பெண், மாப்பிள்ளையின் தாயார், ஆச்சி தங்கைமார், மாப்பிள்ளையின் ஆச்சி, தங்கச்சி மக்கள் மாப்பிள்ளையின் பெரியப்பச்சி சித்தப்பார் மகள்கள் இறக்கி இருவருமாக நடு வீட்டிற்குள் கொண்டு போய் வைத்தல் வேண்டும்.

## பணம் எழுதுதல் :-

திருப்பூட்டி முடிந்ததும் நேரத்தை அனுசரித்து மாப்பிள்ளை வீட்டுப் பங்காளிகளும் பெண் வீட்டுப் பங்காளிகளும் தனித்தனியாக இருந்து பணம் எழுத வேண்டியது. ஒரு முக்காலியில் சருவச்சட்டி வைத்துப் பச்சைப் பாலை ஊற்றி வெற்றிலையைக் கிள்ளிப்போட்டு அதில் ஒரு ரூபாய் நாணயத்தையும் போட்டதன் பின் பணம் எழுத வேண்டும்.

முதலில் பங்காளிகள் பிறகு உறவினர்கள் பின்பு மாமக்காரர்களையும் எழுதிப் பின்பு சடங்குக்காரர்கள், சம்மந்தப்புரங்களையும், உறவினர் நண்பர்களையும் எழுதி ஒன்றாகப் பணத்தைச் சிகப்புத் துணியில் முடிந்து, மாப்பிள்ளை வீட்டார் எழுதிய பணத்தை மொய்ப் பண ஏடுடன் வெற்றிலை, பாக்கு, மலர், எலுமிச்சம்பழம் உள்ள தாம்பாளத்தில் கொடுத்து வைத்து– மாப்பிள்ளை பெரியவர்கள் மாமக்காரர்கள் ஆகியோரிடம் கொடுத்து வணங்கி வாங்கி பின்னர், இளையவன் ஒருவன் மாப்பிள்ளையை வணங்க இருவரும் சேர்ந்து அந்த மொய்ப்பண முடிச்சு உள்ள தாம்பாளத்தை நடுவீட்டிற்குள் வைத்து பிறகு எடுத்து கொண்டு வந்து கணக்கில் வரவு வைத்து கொள்ள வேண்டும்.

இதே போல் பெண் வீட்டார்கள் எழுதிய மொய்ப்பண ஏட்டையும் தாம்பாளத்தில் வைத்து பெண்ணின் தகப்பனார் அல்லது பெண்ணின் அண்ணன், தம்பி மாமக்காரர்களிடம் கொடுத்து, வாங்கி தாம்பாளத்தை நடுவீட்டிற்குள் வைத்துப் பிறகு எடுத்து வந்து கணக்கில் வரவு வைத்துக் கொள்ள வேண்டும்.

## கும்பிட்டுக் கட்டிக் கொள்ளுதல் :-

மணவறை முடிந்து நெற்கோட்டை தாண்டி வீட்டிற்குள் சென்று வந்ததும் நடுவாசலில் மணமக்கள் இருவரும் வந்து, ஆளுக்கொரு நாற்காலியில் அமரவேண்டும். மாப்பிள்ளை, பெண் இருவீட்டுப் பெற்றவர்களும் பெரியோர்களும் வந்து நின்றவுடன் மாப்பிள்ளை, பெண் இருவரும் தனித்தனியே விழுந்து கும்பிட்டவுடன் இவர்களுக்கு நல்லாசி வழங்கி வர வேண்டியது.



## சீராட்டுக் கொடுத்தல் (பாக்குச்சுருள்) :-

சீராட்டுக்காக அவரவர் வழக்கப்படி ஒரு தொகையைப் பெண்ணின் தந்தை கொடுத்து அதை வள்ளுவப்பையில் வைத்துப் பிறகு எடுத்து ஸ்ரீ தனப் பணத்துடன் சேர்த்துக் கொள்ளல் வேண்டும். மேல வட்டகையில் இது நடைமுறையில் இல்லை.

## மஞ்சள் நீராடுதல் :-

மணமக்கள் இருவரும் நல்ல உடைகளைக் களைந்து விட்டு வேறு சாதாரண உடைகள் அணிந்து கொண்டு நடுவாசலில் ஒரு நாற்காலியின் மீது அமர வேண்டும் உள்ளூர் கோயில் வயிராவி மாப்பிள்ளைக்கு எண்ணெய் தொட்டு வைப்பார் பிறகு வயிராவி கரைத்து வைத்திருக்கும் மஞ்சள் நீரை மாப்பிள்ளை பெண் பாதங்களில் ஊற்றுவார் அப்போது, மாப்பிள்ளை, பெண் தந்தையார் இருவரும் தங்களது ஆடை நுனிகளை மஞ்சள் நீரில் நனைத்துக் கொள்ளல் வேண்டும். இதுபோல மாப்பிள்ளை பெண்ணின் தாயார் இருவரும் மஞ்சள் நீரில் சேலை நுனிகளை நனைத்துக் கொள்ளல் வேண்டும் பிறகு மணமக்கள் நாணாலைக்குரிய புதிய ஆடைகளை அணிந்து கொள்ள வேண்டும்.

## காப்புக் கழற்றிக் கால் மோதிரம் அணிதல் :-

பெண்ணை மணைமேல் நிற்க வைத்து மாப்பிள்ளையின் தாயார் பெண்ணுக்குத் தன் கையில் அணிந்துள்ள காப்பைக் கழற்றி அணிவித்து, பெண்ணின் (இரண்டாவது) கால் விரல்களில் மிஞ்சி (கால் மோதிரம்) அணிவிக்க வேண்டும். திருப்பூட்டிய பிறகு செய்து கொள்ளும் சடங்கைப் போல் மாப்பிள்ளையின் தாயார் சடங்கு செய்து கொள்ள வேண்டும்.

## காப்பு அவிழ்த்தல் :-

மாப்பிள்ளை, பெண் இருவருக்கும் அவரவர் மாமக்காரர்கள், இருவர் கையிலுள்ள, ஐயரால் முடியப்பட்ட காப்பு இரண்டையும் தனித்தனியாக அந்தந்த மாமக்காரர் அவிழ்த்து ஒரு தாம்பாளத்தில் வைத்து விட வேண்டும்.

**பிள்ளை எடுக்கிக் கொடுத்தல் :–**

சடங்கு குழவியைச் சிகப்புத் துணியில் வைத்து ஒரு தங்கச் செயின் போட்டு அதைப் பேரனாகவே கருதி பெண்ணின் தந்தை எடுக்கிக் கொடுக்க, பெண் நமஸ்கரம் செய்து வாங்கிக் கொள்ளவும். இதுபோல பெண் வீட்டு ஆண்களில் முக்கியமானவர்கள் எல்லோரும் பிள்ளை எடுக்கிக் கொடுத்து ஆசிர்வாதம் செய்ய வேண்டியது.

**அரசாணிக்குப் பொங்கல் இடுவது :–**

பெண்ணின் அம்மான் மனைவி அரசாணிக்காலுக்கு முன் பொங்கல் இட்டு இறக்க வேண்டியது. பிறகு அதை வண்ணாத்தியிடம் கொடுக்க வேண்டும்

**பெண் சொல்லிக் கொள்வது :–**

பெண், தாய் வீட்டிலிருந்து கணவன் வீட்டுக்குச் செல்ல இருப்பதால் தன் தாயிடமும் தாயாதிகளிடமும் சொல்லிக் கொள்ள வேணும். பெண், நடுவீட்டுக்குப் பக்கத்தில் உள்ள பத்தியில் விரித்திரிக்கும் பாய் ஒன்றில் கிழக்கு முகமாகக் கையில் வெற்றிலை பாக்குத் தாம்பாளத்துடன் நிற்க வேண்டும் பெண்ணின் பெற்றோர். உறவினர் பங்காளிகள் ஒவ்வொருவராக வந்து அந்தப்பாயின் மீது எதிரில் நிற்க, அவர்களிடம் வெற்றிலை பாக்குத் தாம்பாளத்தைக் கொடுத்து, அவர்கள் காலில் விழுந்து ,வணங்கி சென்று வருகிறேன் என்று வாங்கிக்கொள்ளவேண்டும்.

**குடி அழைப்பு :–**

பெண் சொல்லிக் கொண்டதும் மணமக்கள் இருவரும் நடுவீட்டில் உட்கார்ந்து இருந்து, எழுந்து வந்து முகப்பு நடுப்பந்தியில் கோலத்திற்கு முன் வந்து நிற்பார்கள். பெண்ணுக்கு ஆயாள் வந்து சிலேட் விளக்கு வைத்து, ஆலாத்தி எடுத்து விபூதி பூசி கட்டுச்சோற்றுடன் வழியனுப்பி வைப்பார்கள் மாப்பிள்ளைக்கு வலது பக்கம் நிற்கும்படியாக பெண் அழைத்துச் செல்ல வேண்டியது. இதுசமயம் பெண்ணின் தாயார் பால் பானை கையில் கொண்டுவர வேணும்.

மாப்பிள்ளையின் ஊரில் ஒரு ஊருணிக் கரையில் இறங்கி கட்டுச் சோறு சாப்பிட்டுவிட்டு மாப்பிள்ளை வீட்டுப் பங்காளி ஒருவரது



வீட்டில் தங்கி இருக்க வேண்டும். அல்லது பெண் அழைக்கும் பொது இடத்தில் இருக்க வேண்டும்.

**அரசாணிக்கால் அவிழ்த்தல் :–**

பெண்ணின் அம்மான் மனைவி அரசாணிக்காலுக்கு முன் பொங்கல் இட்டு இறக்கியதும். பெண் வீட்டுப் பங்காளிகள் அல்லது பெண்ணின் சகோதரர்களே சரவிளக்கை மலை ஏற்றி எடுத்து வைத்துவிட்டு அரசாணிக்காலில் உள்ள அரச இலை, மா இலை கிளுவைக் கம்பு உள்பட யாவற்றையும் அவிழ்த்து விட வேண்டியது பின் பங்காளி வீட்டுப் பையன்களில் ஒருவரை அழைத்து முளைப்பாரியை சர்வச்சட்டியில் வைத்து சிகப்புத் தோம்புத்துணி கொண்டு மூடி, ஊருணியில் அல்லது கிணற்றில் சங்கு ஊதிக் கொண்டு போய், விட்டு வரவேண்டியது. கிளுவை, பாலைக் கம்புகளை வீட்டுத் தோட்டத்தில் ஊன்றி வைக்க வேண்டியது.

**மாப்பிள்ளை வீட்டில் பெண்அழைப்பு :–**

பெண் வீட்டிலிருந்து திருமணம் முடிந்து விடைபெற்று வந்த மாப்பிள்ளை வீட்டுப் பெண்கள், மாப்பிள்ளை வீட்டு வளவு வாசலில் கோலமிட்டு பெண் அழைத்து பொங்கல் இட்டு, அடுப்பை அகற்றி விடலாம். பெண்ணை அழைத்து வரும் சமயம் மூன்று இலையில் சாதம்படைத்து, ஒரு இலைக்கு 4 வாழைப்பழம், பருப்பு, நெய், ஊற்றிப் படையல் செய்து படைத்த இலைகளுக்கு முன் மூன்று தவலைகளில் தண்ணீர் வைத்து ஒன்றில் குலம் வாழும் பிள்ளையும் மற்றொன்றில் எழுத்தாணியையும் போடவேணும். பெண், மாப்பிள்ளை இருவரும் திருமணம் முடிந்து வந்து தங்கி இருக்கும் இடத்திலிருந்து, எல்லோரும் மேள வாத்தியங்களுடன் மணமக்களை ஊர்வலமாக மாப்பிள்ளை வீட்டுக்கு அழைத்து வர வேண்டும். வீட்டிற்குள் நுழையும்பொழது முதலில் வலது காலை எடுத்து வைத்து நுழையும்படி முன்னதாகவே சொல்லி வைத்து அதன்படி மணமக்கள் செய்தல்வேண்டும்.

பெண்ணும் மாப்பிள்ளையும், வீட்டிற்கு வந்ததும் முகப்பு நடுமத்தியில் கோலத்துக்கு முன்பாக நிறுத்தி மாப்பிள்ளையின் அப்பத்தாள், ஆலத்தி எடுப்பார்கள். பிறகு படைத்த இலைக்கு கிழக்குமுகமாக நிற்கும்படி இரு தடுக்கைப்போட்டு ஒன்றில் சடங்கு செய்து கொள்பவர்களும் மற்றொன்றில் பெண்ணும் நிற்க வேணும் இவர்களுக்கு அருகில் மாப்பிள்ளை நிற்க வேணும்.

குறிப்பாக பெண் ஆனவள் பெண்ணழைத்துக் கொண்டு உள்ளே வரும் பொழுது எந்தத் திசையை நோக்கி உள்ளே வருகிறாளோ அத்திசையைப் பார்த்தவாறே முதல் சடங்கு செய்து கொள்ள வேணும். அப்போது திருப்பூட்டுச் சடங்கில் செய்த மாதிரி யாவற்றையும் செய்ய வேணும். அது முடிந்ததும் மற்ற மூன்று திசைகளிலும் சடங்கு செய்து கொள்ளச் சொல்ல வேணும். முதல் சடங்கைத் தவிர அடுத்து அடுத்து உள்ள சடங்குகள். சிலேட்டு விளக்கை இடது கையிலும், கெண்டிச்செம்பை வலது கையிலும் வைத்துச் செய்து கொண்டால் போதும். எல்லாச் சடங்கிலும் பெண் கையில் 2 வெற்றிலை இருக்க வேணும். நான்கு திசையிலும் சடங்கு செய்து வந்தால் ஒரு சுற்று முடிந்துவிடும். பின்னர் இரண்டாவது சுற்றை சும்மா சுற்றி வரவேண்டும். மூன்று சுற்றுக்கும் இரண்டு மாமக்காரர்களும் உடன் நிற்க வேண்டும் மூன்றாவது சுற்று வரும்போது ஒன்றன்பின் ஒன்றாக மணமக்கள் இருவரும் இணைந்து மூன்று தவலைகளுக்குள்ளும், கையைவிட்டுப் பார்த்து, குலம்வாழும் பிள்ளையை மாப்பிள்ளை எடுத்துப் பெண்ணின் கையில் கொடுத்து விட்டு, எழுத்தாணியைத் தன் கையில் வைத்து கொள்ள வேண்டும். அந்தக் குலம் வாழும் பிள்ளையைப் பெண் பத்திரமாக இடுப்பில் செருகிக் கொண்டு நடுவீட்டில் போய் இருவரும் உட்கார்ந்து வெளியே வரவேண்டும்.

### மாப்பிள்ளை பெண் பால், பழம் சாப்பிடுவது :-

பெண் அழைத்து முடித்தவுடன் வளவில் உள்ள மற்றவர்கள் பால், பழம் தருவார்கள். அத்துடன் பாக்கு பணம் ரூ.1. அல்லது 2 வைப்பார்கள். அதை முதலில் மாப்பிள்ளை சாப்பிட்டு விட்டுப் பணத்தை எடுத்துக் கொள்ள வேணும் பின்னர் பெண் எடுத்துக் கொள்ள வேணும்.

### பெண் வீட்டாருக்கு எடுக்கும் பச்சரிசி வேவு :-

மாப்பிள்ளை, பெண், பால், பழம் சாப்பிட்டதும் மாப்பிள்ளை வீட்டில், பெண் வீட்டார் எடுக்கவேண்டிய வேவு இது. வேவுக் கடகத்தில் பச்சரிசி பெ.படி1, தேங்காய் 2, கத்தரிக்காய் 2, போட்டு இருக்க வேணும் பெண் வீட்டைச் சேர்ந்த ஆண்கள் தலையில் இந்த வேவை வைத்து, மாப்பிள்ளைவீட்டைச் சேர்ந்த பெண்கள் இறக்குதல் வேண்டும் குறிப்பாக பெண்ணின் தகப்பனார் தலையில் இருந்து பெண் வேவு இறக்க வேண்டும். மேல வட்டகையில் இது பொங்கல் வேவு எனப்படுகிறது.



### மாப்பிள்ளை வீட்டார் எடுக்கும் நெல்வேவு :-

வேவுக் கடகத்தில் நெல் பெ.படி1, தேங்காய் 2, கத்தரிக்காய் 2 வைத்து மாப்பிள்ளையின் தகப்பனார் தலைப்பாகை கட்டி நெல் கடகத்தைத் தலையில் வைத்திருக்க வேணும் இந்த வேவைப் பெண் வந்து இறக்குதல் வேண்டும். இது மேல வட்டகையில் வழக்கத்தில் இல்லை.

### ஸ்ரீதன உண்டியல் :-

ஸ்ரீதனம் தலைச்சீலையில் முடிந்தது பாக்குச் சுருளில் வைத்தது ஈடுபொன் தந்தது ஆகிய நான்கு தொகைகளையும் குறிப்பிட்டு உண்டியல் எழுதி அந்த உண்டியலையும் அதற்குண்டான ரொக்கம் அல்லது டிராப்டையும் ஒரு தாம்பாளத்தில் வெற்றிலை, பாக்கு, எலுமிச்சம்பழம், பூ வைத்து மணமக்களின் தந்தையார், பெரியவர்கள், மாமக்காரர் முதலியவர்களிடம் மாப்பிள்ளை கொடுத்து வணங்கிப் பெற்றுக் கொண்டு, முடிவில் ஒரு சிறு பையனும் மாப்பிள்ளையுமாகச் சேர்ந்து அத்தாம்பாளத்தை நடுவீட்டிற்குள் கொண்டுபோய் வைத்து எடுத்துவரவேணும். இதற்கு மேலவட்டகையில் கணக்குப் பார்த்தல் என்று பெயர். உண்டியல் எழுதுவது இல்லை பின்னர் பெண் வீட்டார் பாக்கு வெற்றிலை வாங்கி சொல்லிக் கொண்டு, புறப்படவேண்டியது.

### நீர்ச்சோறு இடுவது :-

திருமணம் முடிந்த அன்று இரவோ அல்லது மறு நாளிலோ, பெண் வீட்டார், மாப்பிள்ளை பெண்ணைக் கூட்டிக்கொண்டு சென்று மாப்பிள்ளைக்குக்கு கஞ்சி, பணியாரம் வள்ளிக்கிழங்கு பொரித்து உள்வீட்டில் இலைபோட்டு பெண் பரிமாறி தயிர் ஊற்ற வேண்டியது. அப்போதே நடு வீட்டினுள் பெண்ணை உட்கார வைத்து பெண்ணின் அயித்தை பெண்ணின் கழுத்தில் தும்பைக் கட்டிவிட வேண்டியது அயித்தை அல்லது அயித்தை மகள் அல்லது அப்பச்சி, பெரியப்பச்சி வகையறாவும் தும்பைக் கட்டலாம்.

### மூன்று வேவு அல்லது வழிகள் :-

திருமணம் முடிந்தவுடன் மூன்று முறை பெண்வீட்டார், மாப்பிள்ளை பெண்ணைத் தன் வீட்டிற்குக் கூட்டி வரவேணும் அதில் நீர்ச்சோறு இடுவது முதல் வழியாகவும், மற்ற இரண்டு வழிகளுக்கும், ஒரே தடவையில் வந்து வரலாம். இந்த முறையுடன் திருமண முறைகள்

யாவும் பூர்த்தியடைகிறது. செட்டிநாட்டுக் கல்யாணம் சீரும் சிறப்புடன் நிறைவேறுகிறது.

**காய்ச்சி ஊற்றிக் கொள்ளுதல்:–**

ஒரு குடும்பத்தில் சிறப்பான நிகழ்ச்சி ஒன்று நிறைவெய்தியதை முன்னிட்டு இரு குடும்பத்தினரையும் பாராட்டி அவர்களுடைய உறவினர்கள் (தாய்வழி மாமன்) கொடுக்கின்ற விருந்து இது. புது மணமக்கள் தாய்மாமன் வீடுகளுக்குச் சென்று காய்ச்சி ஊற்றிக் கொள்ளுதல் என்பது தொன்று தொட்டு நிலவிவரும் நமது வழக்கம்.

நமது திருமணம் குறித்துக் கவிப்பேரரசு அமரர் கண்ணதாசன் மிக அழகாகத் திரை இசைப்பாடலில் விவரிக்கின்றார்.

பூ முடிப்பாள் இந்தப் பூங்குழலி
புதுச்சீர் பெறுவாள் வண்ணத் தேனருவி

என்று தொடங்கி

மாதரார் தங்கள் மகள் என்று பார்த்திருக்க
மாப்பிள்ளை முன்வந்து மணவறையில் காத்திருக்க
காதலாள் மெல்லக் கால்பார்த்து நடந்துவர
கன்னியவள் கையில் கட்டி வைத்த மாலை தரக்
காளைத் திருக்கரத்தில் கனகமணிச் சரம் எடுக்க
ஆனந்தம் பாடு என ஆங்றோர் குரல் பிறக்கக்
கொட்டியது மேளம்; குவிந்தது கோடிமலர்;
கட்டினான் மாங்கல்யம் – மனைவாழ்க; குலம் வாழ்க

எனச் சொல்லி


பூ முடித்தாள் இந்தப் பூங்குழலி
புதுச்சீர் அடைந்தாள் வண்ணத் தேனருவி

என்று பெண்ணானவள் பூ முடித்துச் சீர் பெற்றதை முத்தாய்ப்பாய்ச் சொல்லி நிறைவு செய்துள்ளார்.

நம் குலத் தோன்றல்கள் எல்லோரும்
வழி வழியாய்த் திருமணம் செய்து கொண்டு
பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்கவென
எல்லாம் வல்ல இறைகழல் பணிவோம்.



## நகரத்தார் வீடுகளில் பிரசித்தமான நடுவீட்டுக் கோலம்



# வேலங்குடி பட்டயம்
# நகரத்தார் குலமுறை தருமங்கள்

1. மாதா, பிதா, குரு, தெய்வம், பிராமணர், குலதேவதை இவர்களை வணங்குதல்
2. கோவில்களுக்கும், குருஸ்தானங்களுக்கும் உள்ள சொத்தைப் பராமரித்து அதில் வரும் ஊதியத்தை அதே தர்மங்களுக்குப் பயன்படுத்துதல்
3. ஆண்கள் பாதரக்குடி மடத்திலும், பெண்கள் துலாவூர் மடத்திலும் உபதேசம் கேட்டுக் கொள்ளுதல்
4. சிவ மதத்திலேயே இருத்தல்
5. தத்தம் கோயில் மாலை பெற்றே திருமணம் செய்விப்பது
6. ஒரே கோயில் பிரிவில் திருமணம் செய்து கொள்ளாமல் இருத்தல்
7. சுய கோவில் பிரில் சுவிகாரம் செய்து கொள்ளுதல்
8. இரணியூரும், பிள்ளையார்பட்டியும் சகோதரர்களானதால், இவர்கள் தம்முள் திருமணம் செய்யாதிருத்தல்
9. ஜீவ வதை வியாபாரம், குதிரை வியாபாரம், வெற்றிலை போன்ற அழுகும் பொருள்களை வியாபாரம் செய்யாதிருத்தல்
10. பணம் கொடுக்கல் வாங்கலில் தர்ம வட்டி வாங்குதல்
11. திருட்டு வியாபாரம் செய்வதில்லை. பிறன் மனைவி சேர்வதில்லை, தாசிகளிடம் கொடுக்கல் வாங்கல் செய்வதில்லை.
12. நகரமுறை தவறியவர்களையும், ராஜதண்டனை பெற்றவர்களையும் சோரம் செய்தவர்களையும் சேர்ப்பதில்லை.
13. செட்டிநாட்டிலேயே குடியிருப்பது, விசேடங்கள் செய்வது
14. பெண்கள், தீர்த்த யாத்திரைகளுக்குப் புருஷர்களுடன் போய் வருவது.
15. எந்த விஷயத்திலும் முன் வழக்கப்படி நடந்து கொள்வது
16. நகரக்கூட்டத்தை கோயில் வாசல் அல்லது மடத்தில் நடத்துவது.



**WEBSITES (திருமண தகவல் இணையதளங்கள்)**
**www.nagarathar.net**
**www.nagaratharkalyanam.com**
**www.nagarathar.com**
**www.devakottainagarathar.com / matrimonial.html**
**www.bangalorenagarathar.com**
**www.nagaratharthirumanam.com**

**(திருமண பண உதவி பெற இணையதளம்)**
**http://www.achi.org/achi/service/marriage.shtml**

**(இதர நகரத்தார் இணையதளம்)**
**www.nagaratharikkiyasangam.org/nagaratharlinks.htm**

## நன்றி!

இந்நூலைத் தொகுக்க உதவிய நூல்களும், எழுதியவர்களும்...

- ❖ தேவகோட்டை – அ.தி.வெ.வி. முத்துமாணிக்கம் செட்டியார்
- ❖ நெற்குப்பை – சோமலெ
- ❖ பள்ளத்தூர் – பழ. அண்ணாமலை செட்டியார்
- ❖ நற்சாந்துபட்டி – பெ.ராம. இராமநாமன் செட்டியார்
- ❖ இலுப்பைக்குடி நகரத்தார் கும்பாபிஷேக சிறப்பு மலர்
- ❖ நகரத்தார் கலைக்களஞ்சியம்
- ❖ சில திருமண விழா வெளியீடுகள்

மேற்குறிப்பிட்ட அனைவருக்கும் எங்களது நன்றி!